விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 24 வெள்ளிக்கிழமை (10.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 296




# ஈழத்தமிழர் போராட்டத்துக்கு ஜெயலலிதா அங்கீகாரமளிப்பு

**உள்ளே...**

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட

❖ க.பொ.த. (சா/த) பரீட்சை கணிதம் (வினாத்தாள்)

❖ தரிசனம்

## அறிக்கை மூலம் அறிவிப்பு

(சென்னை)

சுய நிர்ணய உரிமை வேண்டி ஈழத்தமிழர்கள் நடத்தும் தார்மீக போராட்டத்தை முழுமையாக அங்கீகரிப்பதாக தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)



## கொழும்பில் தேடுதல் 30 தமிழர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு கிராண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை, முகத்துவாரம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு வீடுகளில் தேடுதல் நடத்திய பொலிஸார் 30 தமிழ் இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுக்காலை தெமட்டகொட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் சகல ஆவணங்களும் இருந்தபோதும் இளைஞர்களை கைது செய்ததாக பிரதி அமைச்சர் பெஇராதாகிருஷ்ணனிடம் முறையிடப்பட்டுள்ளது.

இரவுகளில் வீடுகளில் தேடுதல் நடவடிக்கைமேற் கொள்ளக் கூடாது என்ற உயர் (12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் எண்ணிக்கை 2 இலட்சமாக அதிகரிப்பு!

(கொழும்பு)

படையினரின் எண்ணிக்கையை இரண்டு இலட்சமாக அதிகரிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ படை உயரதிகாரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளதாக படைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் தற்போதைய மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 60 ஆயிரம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனை 40 ஆயிரத்தினால் உயர்த்துமாறு சமீபத்தில் நடைபெற்ற பாதுகாப்புசபை கூட்டத்தில் படை அதிகாரிகளினால் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் போரிடும் திறன் கொண்ட படைப்பிரிவு மற்றும் நிர்வாகப் படைப்பிரிவு என புதிய படையணிகளை மேலதிகமாக உருவாக்க வேண்டிய அவசியம் குறித்தும் படை அதிகாரிகள் ஜனாதிபதி (12ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செலவீனம் மொத்தச் செலவில் 18%

(கொழும்பு)

அரசாங்கத்தின் 2009ஆம் ஆண்டுக்கான மொத்த செலவீனம் 981 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

பற்றாக்குறையை சமாளிப்பதற்கு 850 பில்லியன் ரூபா வெளிநாட்டு கடனாக பெற வேண்டும் எனவும் மதிப்பிடப்பட்டிருக்கின்றது . நாடாளுமன்றம் நேற்றக்காலை கூடியபோது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்த அடுத்த ஆண்டுக்கான செலவீன மதிப்பீட்டு அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 17 ஆயிரத்து 850 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் மொத்தசெலவீனத்தில் 18 வீதமாகும். வரவு, செலவு திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வினால் நாடாளுமன்றத்தில் சமர்ப் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உயர்ஸ்தானிகருடன் ஜனாதிபதி மகிந்த பேச்சு!

(கொழும்பு)

இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத்தை அழைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுமார் 2 மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் யுத்த நடவடிக்கையால் அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படுவதாகக் கூறி தமிழகக் கட்சிகள் குரல் கொடுத்து வருகின்றன. இதனைத் தொடர்ந்து இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன்,புதுடில்லியிலுள்ள இந்தியாவுக்கான இலங்கைப் பிரதித் தூதுவரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலோக் பிரசாத்தை அழைத்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதுடில்லியின் நிலைப்பாடு தொடர்பாக சுமார் 2 மணித்தியாலங்கள் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இந்திய மத்திய அரசாங்கம் முன்வைத்த யோசனைகள் குறித்து ஆராயப்பட்டதாகவும் புதுடில்லியின் யோசனைகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை இலக்குவைத்து தற்கொலைத் தாக்குதல்


### ஒருவர் பலி; ஐவர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பொறலஸ்கமுவ சந்தியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தி பிரதி அமைச்சர் சிறிபால கம்லத் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பு, தற்கொலை தாக்குதல் என்றும் நீர்ப்பாசன விவசாய அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சர் பயணித்துக் கொண்டிருந்த வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது அமைச்சருக்கு பாதுகாப்பு வழங்கிச்சென்ற படைப்பிரிவினரின் வாகனம் ஒன்றே சேதமடைந்ததாகவும் அதில் இருந்த படை அதிகாரிகள் மூன்று பேர் காயமடைந்துள்ளனர் என்றும் (12ஆம் பக்கம் பார்க்க)



சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உன் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.எண் 1039 கொழும்பு
(C-1514)

## யாழ். திறந்த பல்கலைக்கழக இணைப்பாளரின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்தபல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும் ப.மே.க. டி நிகழ்ச்சி திட்டத்தின் நாளை நடைபெறவிருந்த விரிவுரைகள் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவிருக்கும் சான்றிதழ் முன்பள்ளி கற்கைநெறிக்கான விரிவுரைகள் நாளைக் காலை 9-12 மணி வரை இடம்பெறும் அன்றைய தினம் இக்கற்கை நெறிக்காக 2008/2009 பதிவினை மேற்கொண்ட மாணவர்கள் தவறாது விரிவுரைக்கு சமுகமளிக்குமாறு இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சிங்களமொழி பாடவிதானத்துக்கான 2வது மீள்பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகளுக்கு கொழும்பு விலையில் விதை உருளைக்கிழங்கு

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு பயிர்செய்கை மேற்கொள்ளுவதற்கு வசதியாக கொழும்பு விலையில் விதை உருளைக் கிழங்குகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பிரகாரம் யாழ். தேசவள விவசாயிகள் சம்மேளனம், விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பன இணைந்து விதை உருளைக்கிழங்கை விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மேற்படி விதை உருளைக்கிழங்கினை கொழும்பில் கொள்வனவு செய்து அவற்றைக் கொண்டு வந்து யாழ். குடாநாட்டில் விநியோகிப்பதற்கு ஐக்கியநாடுகள் அமைப்பின் அபிவிருத்தித் திட்டத்திடம் உதவிகள் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். மாவட்ட விவசாயிகளின் நலன் கருதியும், விவசாய உற்பத்திகளின் அபிவிருத்தி கருதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கைகளில் ஒன்றாக கொழும்பு விலையில் விதை உருளைக்கிழங்கினை யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

விதை உருளைக்கிழங்கு தேவைப்படும் யாழ். குடாநாட்டு விவசாயிகள் யாழ். தேசவள விவசாயிகள் சம்மேளனம், கமநிழல் நிலையம் பலாலி வீதி திருநெல்வேலி, பவானி வர்த்தக நிலையம், ராஜவீதி நீர்வேலி மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ச)

## சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா

வலி. மேற்கு பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி. மேற்கு பிரதேச செயலாளர் திருமதி ரி.பாபு தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில், கரவெட்டி உதவிப் பிரதேச செயலாளர் சண்முகராசா சிவசிறி பிரதம விருந்தினராகவும் சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் துரைஎங்கரசு, சமூகநலத்துறைத் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் ஏ.ஞானவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் முதியோர் கௌரவிப்பதை தொடர்ந்து சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி மாணவர்களின் விசேட கூத்தும் சிறுவர் கழக மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும் இடம்பெறும். (ச-49)

## யாழிலுள்ள ஆறு பாடசாலைகள் 'இசுறு' பாடசாலைகளாகத் தெரிவு

(திருகோணமலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள 6 பாடசாலைகள் கல்வி அமைச்சினால் இசுறு பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இதனடிப்படையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, வலிகாமம் கல்வி வலயத்தில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வடமராட்சி கல்வி வலயத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, தென்மராட்சி கல்வி வலயத்தில் வரணி மகா வித்தியாலயம், தீவகக் கல்வி வலயத்தில் வேலணை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 பாடசாலைகளுக்கும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினூடாகக் கல்வி அமைச்சினால் தகவல் திரட்டுவதற்கான விபரக்கொத்து விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

தகவல்கள் திரட்டப்பட்டவுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் குறித்த பாடசாலைகளின் வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இப் பாடசாலைகள் பிரதேசத்தின் முன்மாதிரியான பாடசாலைகளாக இருக்கும் என குறிப்பிட்ட அவர், இத் திட்டத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு இருக்க முடியாது எனத் தெரிவித்தார்.

மேற்படி தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் ஆரம்பப் பிரிவை நிறுத்தி வேறு பாடசாலையாக மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்ற மறுக்கும் பாடசாலைகள் இசுறு திட்டத்திலிருந்து நீக்கப்படும் எனவும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா மேலும் கூறினார். (ச-5)

## சர்வமத ஒன்று கூடல்

(பொன்னாலை)

கரித்தாஸ்-கியூடெக் நிறுவன என்.பி.பியினரின் அனுசரணையுடன் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சர்வமத ஒன்று கூடல் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பட்டின சபை வீதி, சங்கானையிலுள்ள சம்மேளன அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சம்மேளனத் தலைவர் க.புஷ்பராஜா தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் என்.பி.பியின் இணைப்பாளர் திருமதி லலிதா விக்டர் நிகழ்வின் நோக்கம் குறித்து உரையாற்றுவார்.

சித்தன்கேணி சிவன் தேவஸ்தான பிரதம குருபிரம்மஸ்ரீ சபாவாசுதேவக் குருக்களின் சர்வமதப்பிரார்த்தனையையடுத்து, 21ஆம் நூற்றாண்டு மனிதனின் பார்வை என்ற தலைப்பில் தென்னிந்தியத் திருச்சபை மூளாய்க் குருமுதல்வர் வண. ரி.எஸ். யோசுவாவும் உலகமும் சமாதானமும் என்ற தலைப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி.சிவதெட்சணாமூர்த்தியும் உரை நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ச-49)

## மக்கள் வங்கியின் உற்சவ கால கரும பீடம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மக்கள் வங்கி, ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய மேற்கு வீதியில், உற்சவகால கரும பீடத்தை ஆரம்பித்து நடத்தி வருகின்றது. 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இக் கரும பீடம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும்.

இக்கரும பீடத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு மக்கள் வங்கியின் ஆரம்ப வைப்புத் தொகையுடன் சிறுவர் சேமிப்புப் புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் ஏற்கனவே வைப்புள்ளவர்களின் கணக்குகளில் வைப்புகளும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

இங்கு மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்குகள் இளைஞர் யுவதிகளுக்கான YES கணக்குகள், விவசாயிகளுக்கான அறுவடை சேமிப்புக் கணக்குகள், ஜனஜய வெற்றிக் கணக்குகள், மகளிருக்கான வனிதா வாசனா கணக்குகள், வர்த்தகர்களுக்கான நடைமுறை மற்றும் முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள் என்பவற்றையும் ஆரம்பிப்பதற்கும் வசதிகள் உள்ளன என பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஓ)


### தேவை

பெண்களுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடிய பெண்கள் தேவை. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:-
திருமதி சந்திரா விஜயகாந்தன்
குளங்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
தொ.பே.இல. :- 021 222 9722
(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்)

(C-1645)

### கடை விற்பனைக்கு

கஸ்தூரியார் வீதியில் மின்சார நிலையச் சந்திக்கும், ஸ்ரான்லி வீதிச் சந்திக்குமிடையில் மேற்குப் புறமாக சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடிக் கடை 100 அடி நீளமும் 12 அடி அகலமும் உடையது. உடன் விற்பனைக்கு உள்ளது.

விபரங்களுக்கு:-
135, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (1629)

கலைகளை வளர்ப்போம் கலைஞரைப் போற்றுவோம்

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை
கலாசாரப் பேரவை நடத்தும்

### வர்ணப் புகைப் படக் கண்காட்சி

யாழ்ப்பாணப் பெட்டகம் - I

15, 16, 17 ஆம் திகதிகள்

தினமும் காலை 9 மணி முதல் பி.ப 4 மணி வரை

எமது பண்பாடு - எமது கலை - எமது வாழ்வு
எமது வரலாறு - எம்மோடு உறவாடிய
கலைஞர்கள் - நாம் வணங்கும் ஆலயங்கள்-
எமக்கு வாழ்வளித்த பூமியின் வரலாறு
இவை யாவும் இன்னும் சொற்ப நாள்களில்
உங்கள் கண்களுக்கு
விருந்தளிக்கத் தயாராகின்றது !
நீங்களும் தயாராகுங்கள்.

இடம்:- பிரதேச செயலக மாநாட்டு மண்டபம், தெல்லிப்பளை.

மண்டபத்தினுள் எக்காரணம் கொண்டும் புகைப்படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

16 ஆம் திகதி வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களுக்காக முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது.

விளம்பர அனுசரணை:-



சானுகா நகைமாடம்

200 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-1646)


## புலமைப் பரிசில் பரீட்சையில் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

2008 புலமைபரிசில் புள்ளியிடலால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களின் சமூகத்தின் அவசர ஒன்றுகூடல் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நாளைக் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் முக்கிய முடிபுகள் எடுக்கப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)


### நன்றி நவில்கின்றோம்



எமது பாடசாலையின் தரம் ஒன்று வகுப்பு 56'X32' கூரையினை திருப்திகரமான முறையில் திருத்தியமைக்க உதவிய சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர்

மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும் மேற்படி உதவியை ஏற்பாடு செய்து தந்தும் திருப்திகரமாக மேற்பார்வை செய்தும் உதவிய சமூக சேவைகள் அமைச்சு, யாழ்.மாவட்ட இணைப்பாளர்

திரு.க. தேவேந்திரன்

அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

(C-1643)

# இன்று ஒரு தகவல்

## ஆபத்தில் உதவி

ஒரு ஆள் தனியாக வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு காடு. அதைத் தாண்டித்தான் ஊருக்குப் போக வேண்டும்.

மிகவும் இருட்டிவிட்டதால் தனியாகப் போவதற்குப் பயந்துகொண்டிருந்தான். காட்டில் மிருகங்களும் அதிகம். என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, இன்னொருவன் அந்த வழியால் வந்து கொண்டிருந்தான்.

நல்ல வேளை ஒரு துணை கிடைத்துவிட்டது என்று நினைத்து, ''என்ன? நீயும் இந்தக் காட்டு வழியாக அடுத்த பக்கம் போக வேண்டுமா?'' என்று கேட்டான்.

அவனும், ''ஆமாம்'' என்றான்.

''அப்படியானால் இந்த நிமிஷத்திலிருந்து நாம் இருவரும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் துணையாக இருப்போம். ஆபத்து வந்தால் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்!'' என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

கொஞ்சத் தூரம் போனதும் ஒரு பெரிய கரடி எதிரில் வந்து கொண்டிருந்தது.

அவ்வளவு தான்! அதில் ஒருவன் கிடு கிடுவென்று ஒரு மரத்தில் ஏறி உட்காந்துவிட்டான்.

மற்றவனுக்கு மரம் ஏறத் தெரியாது. என்ன செய்யலாம் என்று யோசித்தான். அப்படியே தரையில் படுத்து விட்டான். மூச்சை அடக்கிக் கொண்டு செத்தவன் மாதிரி கிடந்தான்.

அந்தக் கரடி பக்கத்தில் வந்து பார்த்தது. முகர்ந்து பார்த்து விட்டு, ''ஆள் செத்துவிட்டான்!'' என்று நினைத்து அப்பால் போய்விட்டது.

கரடி போனதும் மரத்திலிருந்தவன் கீழே இறங்கி வந்தான். கீழே படுத்திருந்தவனைப் பார்த்து,

''அது சரி... உன்னிடம் அந்தக் கரடி காதோரமாக ஏதோ பேசியதே... என்ன சொல்லிற்று?'' என்று கேட்டான்.

அதற்கு படுத்திருந்தவன், ''ஆபத்துக்கு உதவாத உன்னை மாதிரி நண்பர்களை நம்பாதே!'' என்று சொல்லியது என்றான்.

இப்படி ஒரு கதை உண்டு.

நட்பு என்றால் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும். அது தான் நட்பு. ஆபத்து சமயத்தில் கை விட்டால் அதற்குப் பெயர் நட்பு இல்லை.

அது சரி... இருவரது உயிருக்கும் ஆபத்து வரும் போது எப்படி தப்பித்துக் கொள்வது? என்று நீங்கள் நினைக்கலாம்.

அதுவும் நியாயம் தான்.

இருந்தாலும் இருவரும் சேர்ந்து ஒரு சங்கடத்தை சுலபமாக சமாளிக்க முடியுமானால் அந்த நேரத்தில் துணையாக இருப்பதை விட்டுவிட்டு தூர ஓடிப் போனால் அது நன்றாக இருக்குமா?

சில பேர் மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொண்டு நண்பர்களைக் காப்பாற்றுவதும் உண்டு.

அதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்! அவர்கள் இருவரும் ஆளுக்கொரு துப்பாக்கி எடுத்துக் கொண்டு வேட்டைக்குப் போனார்கள்.

ஏதாவது கண்ணில் படுகிறதா என்று அந்த காட்டில் தேடினார்கள். அந்த சமயம் காட்டிலாகா அதிகாரிகள் ''ஜீப்பில்'' வந்து விட்டார்கள்.

அவ்வளவு தான்! அதைப் பார்த்ததும் ஒருவன் வேகமாக ஓட ஆரம்பித்தான். இன்னொருவன் ஒன்றும் புரியாமல் அந்த இடத்தில் நின்றுவிட்டான். ஓடுபவனைப் பார்த்த அதிகாரிகள் அவனைத் துரத்த ஆரம்பித்தார்கள்.

அவன் செடி கொடிகளுக்கு மத்தியில் வளைந்து வளைந்து ஓடினான். நீண்டதூரம் ஓடிய பின் ஒரு இடத்தில் அவனைப் பிடித்து விட்டார்கள்.

''ஏன் இப்படி பயந்துகொண்டு ஓடி வந்தாய்? எடு லைசென்ஸை!'' என்றார். அதிகாரி கோபத்துடன். அவனும் லைசென்ஸை எடுத்துக் காட்டினான்.

''உன்னிடம் தான் லைசென்ஸ் இருக்கிறதே! எதற்காக இப்படி ஓடி வந்தாய்?'' என்று கேட்டார் அதிகாரி. அதற்கு அவன் ''என் நண்பனிடம் லைசென்ஸ் இல்லையே! அதனால் அவனை உங்களிடமிருந்து தப்பிக்க வைப்பதற்காகத் தான் நான் இவ்வளவு தூரம் ஓடி வந்தேன்!'' என்றான்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆயுதங்களை கீழே வைத்தால் தான் பேச்சு; அது ஒருபோதும் சாத்தியமாகாது

## நாடாளுமன்றில் ஸ்ரீகாந்தா எம்.பி.

(கொழும்பு)

தமிழ்த்தேசியத்தின் எழுச்சியை தோற்கடித்து சின்னாபின்னமாக்குவதற்காகவே அரசாங்கம் பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி. என்.ஸ்ரீகாந்தா சபையில் ஆவேசமாகக் கூறினார்.

ஆயுதம் கீழே வைக்கப்பட்டால் தான் பேச்சுவார்த்தை என்றால் அது ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை என்பதை அரசாங்கம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஸ்ரீகாந்தா எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

வன்னியில் இடம்பெற்றுள்ள அவல நிலை தொடர்பில் ஐ.நா. உட்பட பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே இன்று ஓரளவாவது நிவாரணப் பொருட்கள் அங்கு சென்றடைந்திருக்கின்றன. இதனை சிங்கள அரசாங்கம் உணர்வுபூர்வமாக செய்யவில்லை. தமிழ் மக்கள் மீது கரிசனைகாட்டுவதாக அரசாங்கம் நடித்துக்கொண்டிருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களுக்கும் தமிழ்த்தேசியத்திற்கும் எதிராகவே அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. தமிழ்த் தேசிய எழுச்சியை சிதைத்து சீரழித்து அதனைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவே சிங்கள பேரினவாத அரசாங்கம் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றை தமிழ் மக்கள் மீது திணித்திருக்கின்றது.

இந்நிலையில் ஆயுதங்களை கீழே வைத்து விட்டு வந்தாலே பேச்சுவார்த்தை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரசாரம் செய்து வருகிறார்.

யுத்தம் முடிந்த பின்னர் சமாதானப் பேச்சு என்றும் கூறப்படுகின்றது.

அரசாங்கம் கூறுவதைப் போல ஆயுதம் கீழே வைக்கப்பட்டால் தான் சமாதானப் பேச்சுவார்த்தை என்றால் அந்தப் பேச்சுவார்த்தை ஒருபோதும் நடைபெறப் போவதில்லை.

நிபந்தனைகள் அற்றவகையில் குறுகிய காலத்திற்குள் பேச்சுக்கு தயார் என்பதை அரசாங்கம் தெரிவிக்கவேண்டும். (ஓ-6)

# பிரதி சட்ட மா அதிபராக ஹேமந்த பிரிய சாத் நியமனம்

(கொழும்பு)

பிரதிசட்டமா அதிபராக ஹேமந்த பேப் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வரையில் சட்ட மா அதிபராக பணியாற்றிய சீ.ஆர்.டி சில்வா பதவியிலிருந்து ஓய்வு பெற்றதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஹேமந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ஹேமந்த 1978ஆம் ஆண்டு முதல் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் சட்டத்தரணியாகக் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1989ஆம் ஆண்டு சிரேஷ்ட சட்டத்தரணியாக ஹேமந்தவிற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

மேலும் ஹேமந்த 1999ஆம் ஆண்டு முதல் பிரதி சொலி சிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்து வந்தார்.

பின்னர் 2007ஆம் ஆண்டு சொலி சிட்டர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டார். (ஓ)

# கொழும்புக்குள் நோயாளர்களாக புலிகளின் தற்கொலைதாரிகள் நுழைகின்றனர் -ஜனாதிபதி



கொழும்புக்குள் நோயாளர்களாக புலிகளின் தற்கொலைதாரிகள் நுழைவதாக தனது அமைச்சரவை சகாக்களிடம் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் கூறியதாவது,

புலிகளின் தற்கொலைதாரிகள் முதலில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர்.

பின்னர் தங்களை கொழும்பு தேசிய மருத்துமனைகளுக்கு மாற்றுமாறு அவர்கள் கோருகின்றனர். பின்னர் மருத்துவர்களின் சான்றிதழ்களுடன் அவர்கள் கொழும்பு மருத்துவமனையில் சேர்ந்து கொள்கின்றனர்.

இப்படி கொழும்புக்கு மாற்றிக் கொண்டு வரப்படுகின்றன நோயாளர் காவு வாகனங்கள் சோதனையிடப்படுவதில்லை என்பதால் இவற்றை புலிகள் பயன்படுத்துகின்றனர்.

முன்னாள் படைத்தளபதி அனுருத்த ரத்வத்தவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள், தெரிவிக்கின்றன. அதனால் அவருக்கு மேலதிகப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றார் மஹிந்த. (அ-6)

# இராசி பலன்

10.10.2008
(புரட்டாதி 24, வெள்ளிக்கிழமை)
அவிட்டம் முழுவதும்
ஏகாதசி பின்னிரவு 4.43 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02 -7.32 மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | போசனசுகம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, கலந்துரையாடல். |
| இடபம் | அதிகாரம், முயற்சி கை கூடும், நண்பர்கள் உதவி, உற்சாகம். |
| மிதுனம் | பிதா சிந்தை, கட்டுப்பாடு, புதிய தகவல், அதிக செலவு. |
| கடகம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், பிரயாணம், உடல் நலக் குறைவு. |
| சிங்கம் | அபூர்வ சந்திப்பு, முயற்சி தாமதம், சுப நிகழ்வு, போசன சுகம். |
| கன்னி | தேக நலன், காரிய அனுகூலம், பண வருவாய், மனமகிழ்ச்சி. |
| துலாம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு, நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | சுப செலவு, தேகநலன், பிரயாண சுகம், வேலைச் சுமை. |
| தனுசு | சகோதரர் உதவி, முயற்சி கை கூடும், நல்ல செய்தி, போசன சுகம். |
| மகரம் | மனக்கிலேசம், முயற்சி தாமதம், அப கீர்த்தி, ஆரோக்கியக் குறைவு. |
| கும்பம் | புதிய முயற்சி, போசனநன்மை, நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை. |
| மீனம் | காரிய அலைச்சல், சுப செலவு, பிரயாணக்கஷ்டம், ஆரோக் கியக்குறைவு |

வளவன்

# ஜானக பெரேராவின் மரணத்துக்கு கோத்தபாய தான் பொறுப்பு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

முன்னாள் இராணுவத் தளபதி ஜானக பெரேராவின் மரணத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷதான் பொறுப்பு என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியதாவது,

ஜானக பெரேராவின் பாதுகாப்பு தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அப்போது ஜானகவுக்கு எதுவித உயிராபத்து அச்சுறுத்தலும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டிருந்தார். நீதிமன்றில் கோத்தபாய பொய்யான மனுவைத் தாக்கல் செய்தார். அவரே இப்போது ஜானகவின் மரணத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும். அவர் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்.

வடமத்திய மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக ஜானகவுடன் நான் ஆலோசனை நடத்திய போது அரசாங்கத்தின் மூத்த அமைச்சர்களிடமிருந்து அவருக்கு 5முறை அழைப்பு வந்ததாகவும் மஹிந்த அரசாங்கத்தில் அவர் இணையவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியதாகவும் ஜானக தெரிவித்திருந்தார் என்றார் லக்ஸ்மன் கிரியெல்ல. (அ-6)

## மென்பந்து துடுப்பாட்டம் இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால் திணைக்களம் நடத்தும் 16 ஓவர் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 1 மணிக்கு அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் யாழ்.தபால் திணைக்கள அணியும் யாழ்.போதனா வைத்தியசாலை அணியும் மோதவுள்ளன . (அ)

## நாடக விழா

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் தமிழ் மாணவ மன்ற வளர்ச்சி நிதிக்காக பழைய மாணவ சங்கம் நடாத்தும் மாபெரும் நாடக விழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் தமிழ் மாணவ மன்றத் தலைவர் விநாயகன் டினேஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 2007 ஆம் ஆண்டு வலய மட்டத்தில் வெற்றிபெற்ற "பெண்ணொன்று பிறந்தால்..." என்ற நாடகமும் 2008 ஆம் ஆண்டு மாவட்ட மட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் வெற்றிபெற்ற நாடகமும், மாணவர்களின் இசை விருந்தும் இடம்பெறவுள்ளதாக சிதம்பராக் கல்லூரி தமிழ் மாணவர் மன்றம் அறிவித்துள்ளது. (ஓ)

## பொதுக்கூட்டம்

(அல்வாய்)

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் உபதலைவர் வி.குலராசசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் அனைவரும் வருகை தந்து நிர்வாக சபைத் தெரிவிலும் பங்கேற்குமாறு பழைய மாணவர் சங்கச் செயலாளர் த.இராஜகோபாலன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-19)

## தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டிய கட்டுரைப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இம் மாதம் வாசகர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்றை நடாத்த உள்ளது.

இப் போட்டியில்,கேடில் விழுச் செல்வம் கல்வி, புத்தகம் ஒரு சமுதாயம், வாசிப்புத் திறன் விருத்தியில் பொது நூலகங்கள், தகவல் புரட்சி தோற்றுவிக்கும் விளைவுகள், இன்றைய உலகில் நூல்கள் என்னும் தலைப்புகளில் நடுவர்களால் தேர்தெடுக்கப்படும் ஏதாவதொரு தலைப்பில், 300 சொற்களுக்குக் குறையாமல் 1 மணி 30 நிமிடத்தில் கட்டுரை வரைய வேண்டும்.இதற்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை. போட்டி கச்சாய் பொது நூலகத்தில் இம் மாதம் 20ஆம்திகதி திங்கட்கிழமை முற்பகல் 9மணிக்கு நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 18 ஆம்திகதிக்கு முன் நூலகத்தில் பதிவு செய்யும் படி நூலகப்பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலை கொழும்புத்துறை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V.)இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை சுவாமியார் வீதி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணி வரை கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை- 10

தமது உரிமைகள் கடப்பாடுகள் பற்றியும் தமக்கு எதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுகள் பற்றியும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.

## வடமராட்சி கிழக்கில் சிரமதானப் பணிகள்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அமைச்சு ஜேர்மன் தொழில்நுட்ப அனுசரணையுடன் மேற்கொண்டு வரும் கலந்துகொள்வோம் -அபிவிருத்தி -வெற்றி எனும் தொனிப்பொருளில் மக்கள் பங்களிப்போடு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வலிக்கண்டி, குடத்தனை மேற்கு, குடத்தனை வடக்கு, அம்பன் பகுதிகளில் இவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சிரமதானப் பணிகளில் செயற்பாடுகள் குறித்து அப் பகுதிக்கு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கடந்த திங்கட்கிழமை விஜயம் மேற்கொண்டு உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் சென்று பார்வையிட்டதுடன் அம்பன் வைத்தியசாலை வளாகம், சிறுவர் பூங்கா ஆகிய இடங்களில் மரம் நடும் இயக் கத்தை மேலதிக அரசாங்க அதிபர் ஆரம் பித்து வைத்தார்.சிரமதானப் பணியோடு அப் பகுதியில் உள்ள குடத்தனை வடக்கில் 3 கிணறுகளுக்கும் மணற்காடு முகாமில் பதினான்கு கிணறுகளுக்கும் குளோரின் ஏற்றம் செய் யப்பட்டது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் ஆறு பெண் நாய்களும், இரண்டு ஆண் நாய்களும் நிரந்தர கருத்தடை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது. இந்நிகழ்வுகளில் உதவி அரசாங்க அதிபர், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் மக்களுடன் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஓ)

## சிநேகபூர்வ உதைபந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியை மகாஜனா வெற்றிகொண்டது

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் மகாஜனாக் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்றுக் கொண்டது.

மேற்படி போட்டியில் முதலாவது போட்டியாக நடைபெற்ற 13 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் மகாஜனாக் கல்லூரி யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றிகொண்டது.

### விறுவிறுப்பான ஆட்டம்

இரண்டாவது போட்டியாக நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மகாஜனாக் கல்லூரி வீரர்களின் விறுவிறுப்பான ஆட்டத்தினால் 3-2 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியை மகாஜனாக் கல்லூரி வெற்றிகொண்டது.

### போராடி வென்றது

மூன்றாவது போட்டியாக நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தபோதும் கோல்கள் எதனையும் பெற முடியாத நிலையில் மகாஜனாக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியை போராடி வெற்றி கொண்டது.

### அபாரமாக ஆடியது

இறுதிப் போட்டியாக நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் ஆரம்பமான நேரம் முதல் மகாஜனா கல்லூரி வீரர்களின் அபாரமான ஆட்டம் காரணமாகவும் ரசிகர் களின் உற்சாகம் காரணமாகவும் யாழ்ப்பா ணக் கல்லூரி அணியினை 3-0 என்ற கோல் கணக்கில் மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்றுக்கொண்டது.

### மகாஜனாக் கல்லூரி அனைத்து பிரிவிலும் வெற்றி

போட்டியின் 13, 15,17,19 வயதுப் பிரிவினருக்கான அனைத்துப் போட்டியிலும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினை மகாஜனாக் கல்லூரி அணி வெற்றி பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

## போதைப் பொருள் எதிர்ப்பு தின சுவரொட்டிப் போட்டியில் முதலாம்இடம்



நாடளாவிய ரீதியில் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்ற போதைப் பொருள் தடுத்தல் சுவரொட்டிச் சித்திரப் போட்டியில் சிரேஷ்ட பிரிவல் கரணவாய் மகா வித்தியாலய மாணவன் ச.ஐங்கரன் முதலாம் இடம் பெற்றுள்ளார். கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று கல்வியமைச்சில் நடைபெற்ற பரிசில் வழங்கும் நிகழ்வில் இவருக்கான பணப் பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டது. (ஓ-19)

## மகாஜனாக் கல்லூரியை வெற்றிகொண்டது கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளிற்கிடையிலான 13 வயதிற்குட்பட்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் புதன் கிழமை விக்னேஸ்வராக் கல்லூரியும் மகாஜனாக் கல்லூரியும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற விக்கேஸ்வராக் கல்லூரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

மகாஜனாக் கல்லூரி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 188 ஓட்டங்கள் பெற்றது. இதில் சிந்துஜன் - 18 ஓட்டங்களையும்,அபிராம் - 11 ஓட்டங்களையும் எடுத்தனர்.

விக்னேஸ்வராக் கல்லூரி பாகீசன் 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வராக் கல்லூரி 126 ஓட்டங்களைப் பெற்றது.

அனோசன் ஆட்டமிழக்காமல் 36ஓட்டங்களையும், கானகன் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனாக் கல்லூரி 2ஆவது இனிங்ஸில் 32 ஓட்டங்களுககு 9 விக்கெற்றுக்களை இழந்தது.

விக்னேஸ்வராக் கல்லூரி சார்பாக மதுஷன் அபாரமாக பந்து வீசி 6 விக்கெற்றுக்களை சாய்த்தார். முதலாவது இன்னிங்ஸ் முன்னிலையில் விக்னேஸ்வராக்கல்லூரி வெற்றி பெற்றது. (ஓ)

## வாராந்தச் சொற்பொழிவு

ஸ்ரீஅம்மா பகவான் வாராந்தச் சொற்பொழிவு நிகழ்வில் நாளை சனிக்கிழமை மாலை 3.30 முதல் 5.30 வரை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ள ஆரோக்கிய பூஜையைத் தொடர்ந்து "ஸ்ரீ அம்மா பகவான் தரிசனம்" என்னும் பொருளில் காரை எம்.பி.அருளானந்தன் உரையாற்றவுள்ளார். அனைத்து பக்தர்களும் கலந்து அருள் பெற்றுய்யும் வண்ணம் ஸ்ரீ கல்கி சுவர்ணயுக அமைப்பகம் கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

## வடமராட்சி கல்விவலய செயலமர்வுகள்

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் முறைமைகள் தொடர்பான செயலமர்வுகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் காலை 8.30 முதல் 5.30 வரை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கனகாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-19)

◆◆◆

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள 1AB, 1C, தரம் II பாடசாலை அதிபர்களுக்கான தரவட்ட செயலமர்வு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 முதல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு அதிபர்களையு[ம்] தரவட்ட செயற்பாடுகளுக்கு பொறுப்பாக செயற்படக்கூடிய ஒரு ஆசிரியரையும் பங்கு பற்றுமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ஓ-19)

## யாழ்.செய்திகள்


## மானச சஞ்சாரம்

(யாழ்ப்பாணம்)


யாழ் பல்கலைக்கழக உள மருத்துவத் துறை, யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் சாந்திகம், உளநல சங்கம் அகவொளி, சுகவாழ்வு ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்தும் "மானச சஞ்சாரம்" உலக உள நல நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் 4.30 மணிவரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி த. விக்னராஜா கலந்து கொள்ள உள்ளார். அத்துடன டாக்டர் இ.கணேச மூர்த்தி, வணபிதா சு. டேமியன், டாக்டர் ப. உரோமகேஸ்வரன், நா. நவராஜி, சோ.பத்மநாதன் ஆகியோர் பங்குபற்றும் மனங்கொள்வோம் எனும் தலைப்பிலான கருத்தரங்கு மற்றும் அழைத்தால் வாராயோ எனும் தலைப்பிலான கலை நிகழ்வும் இடம் பெறும். (ஓ)

## அரச மரத்தில் பிள்ளையார்



கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன் உள்ள அரச மரத்தில் தன்னிச்சையாக தோன்றிய பிள்ளையார் உருவத்தைப் படத்தில் காணலாம். (படம்:கிஷோத்)



# தரிசனம்

வலம்புரி

# பௌத்தம் வேறு சிங்கள பௌத்தம் வேறு

## மதம் -தமிழர் பார்வை

இலங்கையில் தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு மதம் பிரச்சினையே இல்லை. கிறிஸ்தவர்களும், இந்துக்களும் தமிழர்களே. முஸ்லிம்களை இணைப்பதற்காகவே தமிழ் பேசும் மக்கள் எனக் கூறப்பட்டது. தமிழர்களாக இருக்கக் கூடிய இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தவர்கள் தத்தம் மதத்தின் பேரால் ஒருபோதும் மோதிக் கொண்டவர்கள் அல்லர்.

ஆனால் சிங்களவர்களைப் பொறுத்த வரை அவர்கள் பௌத்தத்தைத் தங்களின் அரசாட்சி மதமாகக் கருதுகின்றனர். சிங்கள பௌத்த கோஷம் இலங்கையைத் தங்களின் நாடாகப் பார்க்கின்றது. இங்குதான் பிரச்சினை கருக்கட்டுகின்றது. பொதுவாக சமயங்கள் மனிதனை நெறிப்படுத்தும் மார்க்கமாகவே அமைகின்றது.

மனிதனைப் பண்படுத்தி அவனை ஒழுங்குபடுத்த வேண்டிய மதம் இன ஒற்றுமையை - அமைதியின்மையை - வன்முறையை ஏற்படுத்துமாக இருந்தால் அதற்குள் பெரியதோர் தவறு உண்டென்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். இப்போது இலங்கையில் பௌத்தம் பிரச்சினைக்குக் காரணம் அல்ல. தமிழர்கள் பௌத்தர்களாக இருந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலுள்ள நாகவிகாரை எந்தளவு தூரம் தமிழ்மக்களிடையே நுழைந்துள்ளது என்பதைப் பார்க்க வேண்டும்.



நாகவிகாரை

யாழ்ப்பாண மண்ணில் விகாரைகள் அமைவதைத் தமிழ் மக்கள் ஒரு போதும் தமக்கு எதிரான விடயமாகக் கருத வில்லை. எனவே தனித்து பௌத்தம் இனப்பிரச்சினைக்குக் காரணம் அல்ல. சிங்கள பௌத்தமே காரணமாகும்.

### சிங்கள கிறிஸ்தவர்கள்

சிங்கள பௌத்தர்கள் இலங்கையைத் தமக்குரிய நாடாகப் பார்ப்பதன் ஊடாகவே இனத்துவ வன்மங்கள் முளையிடத் தொடங்கின. இங்குதான் சிங்களக் கிறிஸ்தவர் கள் பிரச்சினையை எதிர் கொள்கின்றனர். சிங்கள பௌத்தர்கள் இலங்கையைத் தமக்குரிய நாடாகப் பிரகடனப் படுத்தியிருக் கும் போது மத மாற்றத்துக் குட்பட்ட சிங்களவர்களின் நிலை தர்மசங்கடத் திற்கு ஆளானது.

இதனால் அவர்கள் சிங்கள பௌத்தர்களை விட தங்களை மோசமானவர்களாகக் காட்டிக் கொண்டனர். உண்மையில் சிங்கள கிறிஸ்தவர்கள் தமக்கான ஒரு இஸ்திர நிலையில் இருந்திருப்பார்களாயின் சிங்கள பௌத்தத்தின் இறுக்கமான போக்குத் தளர்ந்திருக்கும் எனக் கூறலாம். ஆனால் சிங்கள பௌத்தர்களை விடத் தாம் மேலும் ஒரு படி உயர்ந்த நாட்டுப் பற்று மிக்கவர்கள் என்பதைக் காட்ட அவர்கள் முற்பட்டனர்.

இதன் காரணமாகத் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும், சிங்களக் கிறிஸ்தவர்களுக்கும் மத ரீதியான ஒற்றுமை கூட ஏற்படாமல் போயிற்று. சிங்களத்திலும் தமிழிலும் கிறிஸ்தவர்கள் இருந்தும் இரு இன ஒற்றுமை வலுவடையாமல் போனதற்கான மூல காரணம் சிங்கள பௌத்தத்தை அனுசரித்து அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதிலேயே சிங்கள கிறிஸ்தவர்கள் அக்கறை கொண்டிருந்தனர்.

### பிக்குகளை எடுகோளாக்கி பௌத்தத்தை அளக்கக் கூடாது.

பௌத்த பிக்குகளின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பௌத்த மதத்தை அளவிடுவது பொருத்துடையதல்ல. கௌதம புத்தபிரானின் போதனை பிற உயிர்க்கு



## பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

சந்திப்பு-
என்.சண்முகானந்தன்
என் .விஜயசுந்தரம்


இம்சை புரியாமல் இருப்பதை வலியுத்துகின்றது. கௌதம புத்தபிரானின் போதனைகளும் வழி காட்டல்களும் அன்பை- அகிம்சையை அடிப்படையாகக் கொண்டவை.

ஆனால் இலங்கையின் இன விவகார வரலாற்றில் பௌத்த பிக்குகளின் வகிபங்கு அதிகமாகும். சமாதான முயற்சிகள், சமாதானப் பேச்சுக்கள், இன ஒற்றுமைப்பாடுகள், இலங்கை எல்லா இனங்களுக்கும் உரிய நாடென்ற அத்தனை உயர் எண்ணங்களிலும் பௌத்த பிக்குகள் துளைத்த ஓட்டைகளே அதிகம். இருந்தும் இதில் எல்லாப் பிக்குகளும் பங்கேற்றார்கள் எனக் கூற முடியாது.

மாறாக மேற்கூறியவற்றை உடைப்பதில் - அமுலாக்காமல் தடுப்பதில் பிக்குகளின் வகிபங்கு அதிகம் என்பதை நிகாரரிக்கவும் முடியாது. பேராசிரியர் நியூட்டன் குணசிங்க பௌத்தம் வேறு சிங்கள பௌத்தம் வேறு எனக் குறிப்பிடுவார். "தமிழும் பௌத்தமும்" என இலங்கை வானொலியில் நான் உரையாற்றியுள்ளேன். நான்கு வகையான பௌத்தம் உண்டென சைவ சமயத்தில் இருக்கக் கூடிய சிவஞான சித்தியார் பரபக்கம் கூறுகின்றது.

சிவஞானசித்தியார் கூறும் சௌத்தாந்திரிகம் என்ற பௌத்தம் பற்றிய கருத்துக்களை பாளியில் கூடக் காண முடியாது. எனவே தமிழுக்கும் பௌத்தத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு. இந்த உண்மைகளைச் சிங்கள பௌத்தம் மறைத்து, - மறந்து போனமை இன ஒற்றுமைப்பாட்டிற்குக் குந்தகமாக அமைந்தது எனலாம்.

சிங்கள பௌத்தம் எனும் கோஷம் எழுப்புவோர் முதலில் சிங்கள பௌத்தம் வந்ததற்கான காரணத்தை அறிய வேண்டும். தாம் சிங்கள பௌத்தர்கள் என்பதற்காக எமக்கே இந்த நாடு சொந்தம் என்றோ, ஏனைய மதத்தவர்கள், இனத்தவர்களுக்கு இந்த நாடு சொந்தமில்லை என்றோ கூற முடியாது. கூறவும் கூடாது. மகாவம்சத்தின் ஒவ்வொரு அத்தியாயத் திலும் பக்திக்காக ஏங்குவோருக்குக் கூறப் படுவதாகவே சுட்டிக் காட்டப்படுகின்றது. மகாவம் சம் வரலாறாக எழுதப்படவில்லை. அது பக்தியை விரும்புவோருக்கானது. எனவே இலங் கையில் இன ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் சிங்கள பௌத்த கோஷம் தணியவும் எல்லா மதங்களும் சமமானவை என்ற பொதுமையை ஏற்படுத்தவும் வேண்டும். இதனைச் செய்யாத வரை சிங்கள பௌத்தம் இலங்கையின் பல்லின ஒற்றுமைக்குக் குந்தகமாகவே அமையும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தாம் சார்ந்த சமயங்களில் சிங்கள பௌத்தம் போன்ற முதன்மையை ஒருபோ தும் காட்டு வதில்லை.



## நீடித்துச் செல்லும்....

(8ஆம் பக்கம் தொடர்ச்சி)

"நீர் அதிகளவில் மாசடைந்துள்ள பிரதேசமாக கல்பிட்டி. பள்ளிவாசல்துறையைச் சொல்லலாம். அதிக மழை காலங்களில் இப் பிரதேசத்தின நீரை அருந்த வேண்டாம் என சுகாதார திணைக்களத்தினால் சில அறிவுறுத்தல் வழங்குவது வழக்கமாகும்.

இவ்வாறு பல்கலைக்கழகப் படிப்பை முடித்து விட்டு வீட்டில் இருக்கும் வேலையற்ற பட்டதாரி எச். எம். சகீல் தெரிவித்தார்.

குடிநீர் வசதியில்லாத மற்றும் போதிய வளத்தைக் கொண்டிராத ஒரு பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டு இடப்பெயர்வினால் இப் பிரதேசத்தில் பாரிய சனத்தொகைப் பெருக்கம் ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப இன்றுவரை அரசாங்கத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கென எவ்வித மருந்து வகைகளோ மற்றும் ஏனைய சுகாதார தேவைகளுக்கான சலுகை களோ வழங்கப்படவில்லை. அதிக சனத் தொகையைக் கொண்ட கற்பிட்டிப் பிரதேசத் தில் கடற்கரை ஓரமாக ஒரு சிறிய வைத்திய சாலை. அங்கு அம்புலன்ஸ் வசதியில்லை. இவ்வாஸ்பத்திரி கடற்படைத் தளத்திற்கு அரு காமையில் இருப்பதினால் இங்கு தங்கியி ருந்து வைத்தியம் செய்வதற்கு பணியாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் கடற்படையினர் தாக்குதல்களை மேற்கொள்ளும் போது இவ் வாஸ்பத்திரியில் இருப்பது மிகவும் ஆபத்தானதாகும். கடற்படைத்தளம் இவ்வாஸ்பத்திரிக்கு அண்மையில் அமைந்திருப்பதால் இவ்வாஸ்பத்திரியில் மாடிக் கட்டிடங் கள் கட்டுவதற்கு கடற்படையினர் அனுமதி வழங்க மறுக்கின்றனர். இதனாலும், இவ்வாஸ் பத்திரி எவ்வித அபிவிருத்தியும் அடை யாத நிலையில் காணப்படுகிறது.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை தொகுத்துப் பார்க்கின்றபோது இப்பிரதேசத்தில் வாழ்கின்ற அகதி மக்கள் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் சுகாதாரம் என்பவற்றில் பாரியளவில் பாதிக்கப்படுகின்றனர். இவைகளின் குறைபாட்டால் இப்பிரதேசத்தில் இருக்கின்ற அகதிப் பெண்கள் சந்திக்கின்ற பாதிப்பு மேலும் ஒரு படி அதிகம் எனலாம்.

"எங்களுக்கு ஏற்பட்ட இவ் அவலமான வாழ்க்கை எப்போது தீரும்? நாங்கள் எப் போது மீண்டும் எமது தாயகத்திற்குச் செல் வோம்? அல்லது அகதியாகவே இருந்து இங் கேயே செத்துமடிவதா? என்ற புலம்பலுடன் காலம் உருண்டோடிக் கொண்டே இருக்கின்றது. இது மகளிர் நிறுவனத்தின் தலைவி ஜுவைரியாவின் ஏக்கத்துடன் கலந்த கேள்வி.




# தரிசனம்

Muslim Information Centre SRI LANKA

# மதங்களுக்கிடையில் பிரச்சினை இல்லை

## மதம்-முஸ்லிம்களின் பார்வை

இலங்கை பல் இனங்களையும் பல மதங்களையும் கொண்ட நாடாகும். இலங்கையில் தற்போது காணப்படுகின்ற எல்லா மதங்களும் குறிப்பிடப்பட்ட காலங்களிலேயே வந்துள்ளன. அவ்வாறு பார்க்கும் போது இலங்கையில் இம்மதங்கள் வருவதற்கு முன்னர் இங்கிருந்த இனம் ஏதோ ஒரு மதத்தையோ அல்லது பல மதங்களையோ பின்பற்றி வாழ்ந்திருக்கிறது என்பது புலனாகின்றது. உண்மையில் இவைகளை நோக்கும்போது இந்த மதங்கள் வருவதற்கு முன்னர் யார் இங்கு வாழ்ந்தார்களோ அவர்களுக்கே இந் நாடு



பூரண உரித்துடையதாக இருக்கும். பின்னர் வந்தவர்கள் அவர்களின் மத உரிமையையும், வாழ்விட உரிமையையும் இல்லாமற் செய்து தங்களது மதங்களைப் பரப்பி இருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

இதன் அடிப்படையில் இலங்கைக்கு இந்தியாவிலிருந்துதான் பௌத்த மதமும், இந்து மதமும் வந்துள்ளது. பௌத்தம் ஒரு மதமாக அல்லாமல் ஒரு சித்தாந்தமாகவே (தத்துவமாக) அதிகமானவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மனித தர்மத்தையும், மனித நேயத்தையுமே கூறுகிறது. அது ஒரு சிறந்த மனிதன் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்புதைப் பற்றிப் பேசுகிறது. அதனால் தான், பௌத்தர்களுக்கென ஒரு கடவுள் இல்லை. புத்த பெருமானைக் கடவுளாக வணங்குகின்ற அதே நேரம் இந்துக்களின் கடவுள்களையும் வணங்குவதைப் பார்க்கின்றோம். உதாரணமாக, கதிர்காமத்தில் காணப்படுகின்ற தமிழர்களின் முருகக் கடவுளுக்கு பௌத்தர்கள் "கதரகம தெய்யோ" என பூஜை செய்கிறார்கள். அவ்வாறு, இந்துக்களுக்கும் பௌத்தர் களுக்குமிடையில் கடவுள் விடயத்தில் அதிக நெகிழ்வுத் தன்மை காணப்படுகிறது. இத னால் பௌத்தர்கள் எந்தக் கடவுளை வணங் குகிறார்கள்? அவர்களுக்கென்று ஒரு கடவுள் தனித்துவமாக இருக்கின்றதா? என பல கேள்விகள் எழும்புகின்றன.

இவ்வாறு பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் கடவுள் வணக்கம், கலாசாரம், கொண்டாட்டங்கள் என்பவற்றில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுகின்றன. உதாரணமாக தமிழ் சிங்கள புத்தாண்டு, பத்திரகாளி அம்மன் உற்சவத்தை சிங்களவர்கள் கொண்டாடுவது என அதிகமான விடயங்களில் ஒன்றுபடுகின்றார்கள். இதற்கு இம்மதங்கள் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து உருவாகியதே காரணமாகலாம்.

ஆனால், முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இந்தியத் துணைக் கண்டத்திற்கு அப்பால் இருந்து இலங்கைக்கு வந்தாலும் குறித்த இலக்கை நோக்காகக் கொண்டு மக்கள் மத்தியில் வேலை செய்கின்ற படியாலும் இம் மதங்கள் வேறு கண்கொண்டு பார்க்கப்படுகின்றன. இதனடிப்படையில் நோக்கும் போது இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்ற முஸ்லிம்களும். கிறிஸ்த வர்களும் தங்களுடைய மத விடயங்களில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர்.

இவ்வாறான வித்தியாசமான பார்வையில் பௌத்த, கிறிஸ்தவ மதங்களுக்கும் பௌத்த இஸ்லாம் மதத்திற்கும் இடையே பல பிரச்சினைகள் ஏற்படுகின்ற அதேநேரம் பௌத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. எனவேதான், இலங்கையின் தற்போது காணப்படுகின்ற பிரச்சினை மொழி ரீதியான பிரச்சினையே ஒழிய மதங்களுக்கிடையிலான பிரச்சினை இல்லை என பலர் கூறுகின்றனர்.

இவ்வாறு நோக்கும் போதும் இலங்கையில் தேசிய மதத்தை பௌத்தம் எனக் கூறிவிட்டு இந்துக்களின் எல்லாக் கடவுள்களையும் வணங்குகின்ற ஒரு முறையைப் பார்க்கலாம். உதாரணமாக பஸ்களில் பார்த்தால் புத்த பெருமான் இருக்கின்ற அதே இடத்தில் இந்துக் களின் கடவுள்களையே அவர்கள் பூஜைக்காக வைத்திருப்பார்கள். அப்படியாயின் இவர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகிறார்களா? இந்து மதத்தைப் பின்பற்றுகிறார்களா? என கேள்வி எழுகிறது. அதேநேரம் அந் தப் பஸ்ஸிலேயே ஒட்டியிருப்பார்கள் "புத்தரின் தேசம்" என்று. இதனூடாக இவர்கள் எதனைக் கூறுகிறார்கள் என்பது புரியாத புதிராக உள்ளது.

இலங்கையில் காணப்படுகின்ற "பிதுரு தால கால மலை" இதனை இந்துக்கள் "சிவனொளி பாத மலை" முஸ்லிம்கள் "பாவாத மலை" கிறிஸ்தவர்கள் "அடம்ஸ் பீக்" என எல்லா மதத்தினரும் தங்களுடைய மதத்தின் தோற்று வாயில் உள்ள கடவுள்களின் பெயர்களைக்கொண்டு அழைக்கின்றனர். இதில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் ஒரே விடயத்தையே கூறுகின்றனர். இந்துக்களும் பௌத்தர்களும் வித்தியாசமான பெயர் கொண்டு அழைத்து வித்தியாசப்படுகின்றர்.

முஸ்லிம், கிறிஸ்தவ மரணச் சடங்கில் இறந்த வரை அடக்கம் செய்கின்றனர். ஆனால் இந் துக்களும் பௌத்தர்களும் எரிக்கின்றனர். இவை களிலும் இரண்டு மதங்களும் ஒன்றுபடுகின்றன. அப்படி இருந்தும் நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையும் அவ் விரு மதங்களைப் பின்பற்றுகின்ற வெவ்வேறு மொழி பேசுகின்றவர்களிடையே இப் பிரச்சினை காணப்படுகிறது. இவைகளுக்கான மூல காரணம் தங்களுடைய மதம், மொழி, கலாசாரம் என்பவற்றில் தெளிவான விளக்கங்கள் இலங்கை மக்கள் மத்தியில் இல்லாமையேயாகும்.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இலங்கையை "புத்தரின் தேசமா" "இந்துக்களின் தேசமா" எனப் பார்ப்பதற்கு முன்னர் தாங்கள் தங்களுடைய இருப்பை நிலை நிறுத்துவதாக அவர்கள் தினமும் போராட வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். இவைகளுக்கு அப்பால் இலங்கை முஸ்லிம்கள் இலங்கையில் அனைத்து மதங்களுடனும் சமாதானத்துடனும், சகவாழ்வு வாழ விரும்புகிறார்கள்.

இதனைத் தவிர்த்து இலங்கையை குறித்த மதம்தான் ஆளவேண்டும் என்றால் அம் மதத்தவர்கள் பின்பற்றுகின்ற கடவுளையும் பாதுகாப்பது அரசின் கடமையாகின்றது. அண்மையில் கிரான்பாஸ் பகுதியில் இந்துக் கடவுளை பௌத்தர்கள் உடைத்த சம்பவம். நடந்தது அதேநேரம் அதே கடவுளை பௌத்தர்கள் வணங்கியுமுள்ளனர். அப்படியாயின் இலங்கையிலுள்ள பிரச்சினையின் வடிவம் என்னவாக இருக்க முடியும்.




எனவே, இலங்கை போன்ற பல் இனம் வாழ்கின்ற பல மதங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழ்கின்ற நாடுகளில் அரசாங்கம் அனைத்து மதங்களைப் பின்பற்றுவதற்கு உரிய சலுகைகளோடு கூடிய உரிமையை சிறப்பாக வழங்குவதன் மூலம் இலங்கையில் ஒரு நிலையான சமாதானத்தை உருவாக்க முடியும். எல்லா மதத்தையும் ஒரே நோக்கில் பார்க்க வேண்டும் ஒரு மதம் இன்னொரு மதத்தையோ, இனத்தையோ ஆளும் மதமாகவோ இனமாகவோ இருக்கக் கூடாது. அவ்வாறே ஒரு இனத்தையோ மதத்தையோ அடிமைகளாகப் பயன்படுத்த வேண்டும் என்றோ, அவர்களின் சொத்துக்கள், அவர்களின் கடவுள்கள் வணக்கஸ்தலங்களைச் சேதப்படுத்துவதையோ மக்கள் மீது கருணை கொண்ட அரசாங்கம் அனுமதிக்கக் கூடாது.

ஆக, மனித தர்மத்தையும், மனிதாபிமானத்தையும் போதித்த புத்தரின் கருத்துக்களைப் பின்பற்றுகின்ற இலங்கை போன்ற நாட்டில் மனித தர்மமும், மனிதாபிமானமும் தளைத்தோங்க வேண்டும். இதன் மூலம் இலங்கையில் தற்போது காணப்படுகின்ற இனங்களுக்கிடையிலான யுத்தம் நீங்கி மனித தர்மம் காக்கப்படும். இவ்வாறான மனித நேயத்தையும் மனிதாபிமானத்தையுமே புத்தர் விரும்பினார்.



சிறாஜ் மஷ்ஹூர் முஸ்லிம் கலாசார மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனப்பணிப்பாளர்



# தரிசனம்

ராவய ③

# இனப் பெரும்பான்மைக்கு அமையவே மதத்தின் முக்கியத்துவம் கணிக்கப்படும்

## மதம்-சிங்களவர் பார்வை

ஆன்மீக எண்ணத்துடனேயே மதத்தை நோக்க வேண்டும் அதனை ஆயுதமாகப் பயன்படத்துவதென்பது அடிப்டைவாதத் திற்கு வழிவகுக்கும். பௌத்த தர்மத்தை மட்டுமே தேசிய மதமாக கருத முடியாது. எந்த மதத்தை சேர்ந்த வருக்கும் தத்தமது மதக்கடமைகளை நடத்தும் சுதந்திரம் இருக்க வேண்டும். மத மாற்றத்தையே நாம் எதிர்க்க வேண்டும். இவ்வாறான செயற்பாடு அடிப் படை வாதத்தை தோற்றுவிக்கும்.

கிறிஸ்தவ மிஷனரி அமைப்புக்கள் பௌத் தர்களை தமது மதத்திற்கு மாற்றும் நடவடிக்



கைகளை மேற்கொண்டது. ஆனால் பௌத்த மத குருமார் கிறிஸ்தவர்களின் நம் பிக்கையை திசை திருப்புவதற்கு முனைய வில்லை இவ்வாறான எந்தச் சம்பவமும் வர லாற்றில் இடம் பெற்ற தில்லை.

பௌத்தர்கள் தமது மதத்திற்காக அர்ப் பணிப்புடன் சேவை செய்யக் கூடிய இனக் குழு மதத்தினராகும். பொலநறுவை யுத்த தில் பௌத்த தர்மத்திற்கு வழங்கப்பட்டது போன்று இந்துமதத்திற்கும் அவர்களது மதக்கடமைகளை நடத்துவதற்குச் சுதந் திரம் வழங்கப்பட்டிருந்தது. மன்னர் இந்து மதத்திற்கு தேவயையான உத விகளை வழங் கினார்.

இந்துக்கள் வாழ்ந்த குடியிருப்பு பிரதே சங்களின் அபிவிருத்திக்காக உதவிகளை வழங்கினார் . முதலாவது விஜயபாகு மற்றும் மஹாபாராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் அனைத்து மதத்தினருக்கும் தத்தமது கட மைகளை நிறைவேற்றும் உரிமை இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் செயற்பட் டனர். அவர்களது ஆட்சிக் காலங்களில் இன மத முரண்பாடுகள் இருக்கவில்லை. எனவே அபிவிருத்தி நடவடிக்கைகள் வேக மாக நடைபெற்றன. அரச பரம்பரையினரி டையே சில பிரச்சினைகள் தோன்றியதே தவிர வேறு எந்தப் பிரச்சினையும் தலை தூக்கவில்லை.

இலங்கை அரசியலமைப்பில் பௌத் தத் திற்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ள தோடு அரச மத அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள தாகவும் சிலர் தெரிவிக்கின்றனர். இது முற்றிலும் திரிவு படுத்தப்பட்ட கருத்தாகும் 72 மற்றும் 78ஆம் ஆண்டு களில் உரு வாக்கப்பட்ட இரண்டு அரசியல் அமைப் புக்களிலும் இலங்கையில் பௌத்த மதத் திற்கு முக்கியத்துவம் வழங்கப் பட வேண் டும் அதேவேளை ஏனைய மதங் களையும் பாதுகாக்க வேண்டும் என்றே தெரிவிக்கப்பட் டுள்ளது.


எனவே இலங்கை அரசாங்கம் பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் வழங்கி கௌர -விக்க வேண்டும். இது ஏனைய மதங் களை அடிமைப்படுத்த வேண்டுமென அர்த் தப்படாது.

சோல்பரி அரசிய லமைப்பிலும் அனைத்து மதக் கருத்தும் சம அந் தஸ்து வழங்கப்பட வேண்டுமென்ற ஷரத்துக்கள் உள் ளடக்கப்பட்டிருந்தது. பௌத்தர்கள் அதி கமாக வாழும் நாடென்பதால் இச் ஷரத்து பிழையானதென பலர் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். சோல்பரி ஆணைக் குழுவை எதிர்ப்பதற்கும் இதுவே காரணமாக அமைந்தது.

உலகில் வியாபித்துள்ள மூன்று பிரா தான மதங்கள் அதே விதமாய் இலங்கை யிலும் வியாபித்துள்ளது. கிறிஸ்தவ மதம் அண்மையிலேயே பரவியது.

13ம் நூற்றாண்டு தொடக்கம் முஸ்லிம்களை இந் நாட்டில் சந்தித்துள் ளோம். பௌத்தர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் என்ற நான்கு மதக் குழுமமும் வாழும் நகரமாக கொழும்பைக் குறிப்பிட முடியும். அரசி யலமைப்பில் பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளமைக்கு கொழும்பில் வாழும் முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ சமூ கத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததில்லை. எந்த வொரு நாட்டிலும் இதே நிலைமைதான் என்பதை உணர்ந்துள்ளனர். பெரும்பான் டையுடனான மதமோ அல்லது மொழியோ அந்தந்த நாடுகளில் முதலிடம் பெறுவதைத் தடுக்க முடியாது.

இதன் மூலம் ஏனைய மதங்களை அடிமைப்படுத்த முனைவதென்பது அவர வர் எண்ணங்களுக்குள்ளேயே தகுதியுள் ளது.




பேராசிரியர் மெண்டிஸ் ரோஹணதீர

வரலாறு என்பது வேரூன்றிய சம்பவங்களுடனான புத்தகமா கும். பலத்த காற்றினால் வேரூன் றிய மரத்தை சாய்த்து விட முடி யாது. பௌத்த தர்மமும் இத னைப்போன்றே அது இந்நாட்டில் ஆரம்பத்திலேயே வேரூன்றிய மதமாகும். வெளிச் சக்திகளின் சதிஷ் திட்டங்களாலோ அல்லது புயல் காற்றினாலோ பௌதிதம் என்ற வேரூன்றிய மரத்தை தகர்த்து விட முடியாது. பல்வேறுபட்ட நெருக் கடிகளுக்கு மத்தியிலும் நீண்ட காலம் நின்றுநிலைப்பது இதனை உறுதிப்படுத் துகிறது.

அரசியலமைப்பில் மதத்திற்கு வழங்கப் பட்டுள்ள முக்கியத்துவத்தை அடிப்படை யாக வைத்து மதத்தின் முக்கியத்துவத்தை அளவிட முடியாது.

நாட்டில் எந்தளவிற்கு அமைதிக்காக மதம் பயன்படுத்தப் படுகின்றது. என்ப தைக் கொண்டே இதனை தீர்மானிக்க முடியும். மதத்தை தள்ளி வைத்து விட்டு தமது நடைமுறை வாழ்க் கையை தனித்து வமாக மேற் கொள்வது எமது நாட் டில் காணப்படும் கவ லைக் குரிய விடய மாகும்.



இதனால் மதத்தின் மூலம் மக்களுக்கு கிடைக்கும் சேவை கள் குறைவடையும்.


மதமெண்பது அரசி யல் சிந்தனையோ அல்லது வேறு விட யமோ அல்ல. மதம் வேறு வாழ்க்கை வேறு என்ற நிலை மதத்தை அரசியல் விடயமாக நோக்கும் போதே ஏற்படுகிறது. மதத்தை அரசியல் மயமாக்காது அதனை அனைத்து மக்களின் நடை முறை வாழ்க் கையுடன் இணைக்க முடிந்தால் இனப்பிரச் சினைத் தீர்வுக்கும் அது வழிவகுக்கும்.

வளங்களை அதி கரிக்க வேண்டுமென்ற எண்ணம் மதத்திற்கு கிடையாது. ஒருவரை ஒருவர் கௌரவிப்பது, பொறுமை, சம அந்தஸ்து, உதவி செய்தல் மாற்றும் நல்வாழ்க்கை என்ற கொள்கைகளே மதத் திற்குள் உள்ளடங்கி யுள்ளன.

மதத்தின் பெயரால் இக் கொள்கை யிலிருந்து வெளியேறுவதாலேயே. பிரச்சி னைகள் தோன்றுகின்றன. தம்மை வஸப் படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக் கத்தினால் மத அடிப்படைவாதமும் உருவா கிறது. ஆன்மீக எண்ணத்துடன் மத நடவடிக்கைகளில் ஈடுபடுவோமானால் அடிப் படைவாதமோ தமது வளத்தை அதிகரித் துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமோ, மதக் கலவரங்களோ ஏற்படாது.

அரசியலுக்காக மக்கள் மத்தியில் மதத்தை அரசியல்வாதிகளே திணிக்கின் றனர். இவ்வாறான செயற்பாடுஇடம் பெறா மல் இருக்குமானால் மதம் பௌதீக மயமாகி யிருக்காது. மதத்தை அரசியலுக்கோ அல்லது தனிப்பட்ட தேவைகளுக்கோ பயன் படுத்தாது.

ஆன்மீக எண்ணத்துடன் பின்பற்ற மக்களுக்கு வழிகாட்டுவதன் மூலம் மட்டுமே உண்மையான மதக் சுதந்திரம் உறுத்செய் யப்படும்.



# தரிசனம்

வலம்புரி
Muslim Information Centre

# நீடித்துச் செல்லும் முகாம் வாழ்க்கை
# இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் பரிதாபம்

1990 ஆம் ஆண்டு இழப்பதற்கு எதுவுமின்றி சிறதறுண்டு சின்னா பின்னமாகி எவ்வித வசதியுமற்று, பாடசாலை போன்ற பொதுக் கட்டடங்களிலும் அகதி முகாம்களிலும் அவலம் நிறைந்த வாழ்க்கையை ஆரம்பம் செய்தனர். வெறுங்கையுடன் எவ்வித ஆதரவுமற்று வந்தவர்களை புத்தளம், கற்பிட்டி போன்ற உள்ளூர் மக்கள் ஆதரவோடும், பரிவோடும் அன்பாக வரவேற்று, பல்வேறு உதவிகளை வழங்கி புகலிடம் தந்தார்கள். அன்று தொடங்கிய எமது அகதி அவல வாழ்க்கை இன்றுவரை அகலமுடியாத நிலையிலேயே காணப்படுகின்றது. இம்மக்கள் வாழுமிடங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இவைகளின் முக்கியமான சிலவற்றை இங்கு தொகுத்துத் தருகின்றோம்

## அகதிப் பெண்களின் பிரச்சினை

இடம் பெயர்ந்த முஸ்லிம் பெண்கள் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள். கல்வி, கலாசார, சுகாதாரம் என அனைத்திலும் இப்பெண்கள் பல்வேறு வகைகளிலும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனை புத்தளம், பாலாவி மகளிர் அமைப்பின் தலைவி ஜுவைரியா கூறுகையில், பெண்களே வீட்டின் அனைத்து விடயங்களையும் பார்க்கின்றனர். பிள்ளைகள் வளர்ப்பது முதல் அவர்களுடைய உணவு, கல்வி, உடை, சுகாதாரம் எல்லாவற்றையும் பெண்களே கவனிக்கின்றனர்.

குடும்பப் பெண்கள் காலையில் 7.00



மணிக்கு கூலி வேலைக்குச் சென்று மாலை 5.00 மணிக்குத்தான் வீடு திரும்புகிறார்கள். அவ்வாறு பெண்கள் வேலைக்குச் செல்லவில்லையென்றால் அக்குடும்பத்தின் ஜீவனோபாயம் பாரியளவில் பாதிக்கப்படும்.

இவ்வாறு குடும்பப் பெண்கள் காலையிலேயே வேலைக்குப் போவதினால் இவர்களின் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. அதாவது ஒரு வீட்டில் இருக்கின்ற மூத்த பெண்பிள்ளையின் கல்வி இடையில் நிறுத்தப்படுகிறது. அம்மூத்த பிள்ளையே ஏனைய பிள்ளைகளைக் கவனிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார். இதனால் சிறு வயதிலேயே பாடசாலையைவிட்டு விலகியவர்களின் தொகை அதிகமாகக் காணப்படுகின்றது.

தாய்மார்கள் சிறு பிள்ளைகளை வீட்டில் பாதுகாப்புக்காக விட்டுச் சென்றதன் பின்னர் அங்கு பல்வேறு சிறுவர் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் பல்வேறு குடும்பங்களிடையே பல பிரச்சினைகள் தினம் தோறும் நடைபெற்று வருகின்றது.

இப் பிரதேசங்களில் ஆண்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. ஆண்கள் தொழிலுக்குச் செல்வதாக இருந்தால் அதிக ஊதியம் கொடுக்க வேண்டும். ஆகவே, ஆண்களின் சில தொழில்களையும் பெண்களே குறைந்த ஊதியத்திற்கு செய்கின்றனர். இதனால் ஆண்கள் வீடுகளிலும், கடைத் தெருக்களிலும், சிறு விளையாட்டுக்களை விளையாடிக் கொண்டும் இருக்கின்றனர்.

பெண்கள் வேலைக்குச் சென்று நாளாந்தம் 150 ரூபா முதல் 250 ரூபா வரையே ஊதியத்தைப் பெறுகின்றனர். இதனைக் கொண்டு தான் அவர்களுடைய நாளாந்த அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்



ளது.

குடும்பப் பெண்கள் மகப்பேற்றுக் காலங்களில் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்றனர். காலையில் வேலைக்குச் சென்று மாலையில் வீட்டு வேலைகளைச் செய்வதனால் அவர்களின் உடலையும் கருவிலிருக்கும் குழந்தையையும் உரிய முறையில் பராமரிக்க முடிவதில்லை. இதனால் பிறக்கின்ற குழந்தைகள் குறைபாட்டுடன் பிறக்கின்றன. மேலும் குழந்தைகள் பிறந்து இறக்கின்ற வீதமும் அதிகமாகக் காணப்படுகின்றது.

அகதி முகாம்களில் வாழ்கின்ற பெண்கள் இவ்வாறு எல்லா விதத்திலும் பல்வேறு பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் தினம் தினம் வேதனையை அனுபவித்து வருகின்றனர். இவர்களின் பிரச்சினைகள் இன்னும் யாராலும் உரிய முறையில் இனங்காணப்பட்டு தீர்க்கப்பட வில்லை என மகளிர் அமைப்பின் தலைவி தெரிவித்தார்.

மற்றுமொரு முக்கியமான பிரச்சினை இங்கு காணப்படுகின்ற தாய் சேய் மருத்துவ நிலையங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்ற தாதிமார்கள் சிங்கள மொழியையே கதைப்பவர்களாக காணப்படுவதாகும். ஆனால், வடக்கிலிருந்து வந்த முஸ்லிம்களுக்கு சிங்கள மொழி அறிவின்மையால் இவர்கள் பல்வேறு அசௌகரியங்களையும் தவறான விளக்கங்களையும் பெற்றுக் கொள்கின்றனர். இதனால், இப்பொண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

தாய் சேய் நிலையங்கள் புத்தளப் பிரதேசத்தில் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. சுமார் 10 கிலோ மீற்றர் சென்று தான் ஒரு தாய் தனது சுகாதார விடயங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். அவ்வாறு சென்றால் அங்கு சுமார் 150- 200 பேர் ஒரு நாளைக்கு கிளினிக்குக்காக காத்திருப்பார்கள். அங்கு அவர்கள் அமர்ந்திருப்பதற்கான இருப்பிட வசதிகளோ மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கான வசதிகளோ இல்லை. அத்தோடு நாளாந்தம் கூலி வேலை செய்து குடும்பத்தைப் பாதுகாக்கின்ற பெண்கள் குறித்த நாளில் கிளினிக் பார்க்க முடியாவிட்டால் மறுநாள் கிளினிக்குக்கு வரச் சொல்வார்கள். இதனால் இவர்களின் அன்றாட ஜீவனோபாயம் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளை அகதிப் பெண்கள் அனுபவித்து வருகின்றனர்.

## அகதி மாணவர்களின் கல்விப் பிரச்சினை

"1990ம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை அகதி மாணவர்கள் மாலை நேரப் பாடசாலையிலேயே கல்வி கற்றார்கள். மாலை 2.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை அங்கு அமைக்கப்பட்டிருந்த பாடசாலைகளில் இடம்பெயர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு இம்மாண வர்களுக்குக் கல்வி வழங்கப் பட்டது".

"பின்னர் மறைந்த தலைவர் அஷ்ரப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக பதவி ஏற்றபின்பு இவர்கள் கல்வி கற்ற பாடசாலைகளில் மேலதிகமாக மாடிக் கட்டிடங்களையும், பல வசதிகளையும் செய்து கொடுத்து மாலையில் கல்வி கற்கும் மாணவர்களையும் காலை யில் கல்வி கற்பதற்கு வழி அமைத் துக் கொடுத்தார்".

"அதேநேரம் அவர் தனியார் காணிகளிலும், அரச காணிகளி லும், முகாம்களிலும் வாழ்ந்து கொண்டிருந்த இம்மக்களை சில கிராமங்களில் குடியேற்றினார். அவ்வாறு குடியேறுவதற்கு குடும்பத் திற்கு 7 ஆயிரம் ரூபா வீதம் கொடுத்தார். இதன் பின் அஷ்ரப்பினால் வழங்கப்பட்ட இத்தொகையைக் கொண்டு அவர்கள் வடமாகாணத்தில் எவ்வாறு வாழ்ந் தார்களோ அவ்வாறு எல்லோரும் ஒன்று சேர்ந்து காணிகளை வாங்கி சிறு சிறு கிராமங் களாகக் குடியேறினார்கள். அவ்வாறு குடி யேறிய கிராமங்களிலும் சில பாடசாலைகள் ஆரம்பிக் கப்பட்டன. இதன் மூலம் மாலையில் கல்வி கற்கின்ற பிரச்சினை ஒருவாறு தீர்க்கப்பட் டது" என ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ்.ஏ. ராஸிக் தெரிவித்தார்.

"அகதி மக்களுக் கிடை யில் காணப்படு கின்ற வறுமை காரணமாகத் தற்போது கல்வி கற் கின்ற அதிகமான மாணவர்கள் பாடசா லையை விட்டு இடைவிலகும் வீதம் அதிகம். அவ்வாறே, காலை உணவை உண்ணாமல் வந்து வகுப் பறையில் பாடத்தில் உரிய கவனத்தை செலுத்த முடியாமை என்பதும் இன்னொரு முக்கிய பிரச்சினையாகும்"

"இவைகளுக்கு அப்பால், சில குடியேற்றக் கிராமப் பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் கற்கின்ற உள்ளூர் மாணவர்களுக்கும் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கமிடையே உள ரீதியான பாதிப்புக்கள் அதிகமாகக் காணப்படுகிறது. அதாவது, இவ்விரு மாணவர்களும் ஒன்றாக இணைந்து ஒற்றுமையாக செயற்படுகின்ற வீதம் மிகவும் குறைவாகும்".

"மேலும், பல்கலைக்கழக நுழைவுக்காக புத்தளம் மாவட்ட மாணவர்களுடன் வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் போட்டி போடுவதினால் அதிக புள்ளிகளைப் பெற்றே பல்கலைக்கழகம் நுழைய வேண்டியுள்ளது. இதனால் உள்ளூர் மற்றும் அகதி மாணவர்கள் மற்றும் பெரியார்கள் மத்தியில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றது. இதனை மேல் மட்டத்திலுள்ளவர்கள், அரசியல்வாதிகள் முன்னின்று இம் மாவட்டத்திற்கு மாத்திரம் மாணவர்கள் பிறந்த பிரதேசத்திற்கு உரியவர்களான பல்கலைக்கழக அனுமதிக்கு முயற்சி செய்தால் இங்கு ஏற்படுகின்ற அதிகமான பிரச்சின்னையைத் தீர்க்கலாம்.

ஆனால் இவைகளுக்கு ஒரு தீர்வாக தற்போது அமைச்சர் ரிஷாத்தினால் 5 பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வைந்து பாடசாலைகளும் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்றன.

அவர்கள் கூறுகிறார்கள், இப் பாடசாலையிலிருந்து உயர் தரத்திற்கு தோற்றும் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கு வட மாகாணத்திற்குரிய வெட்டுப் புள்ளி பார்க்கப்படும் எனக் கூறுகிறார்கள். இது எவ்வளவுக்கு சாத்தியம் என்பது இதுவரைக்கும் தெரியவில்லை.

அதேநேரம், இவ்வாறு புதிய பாடசாலைகளை அமைப்பதினால் இப் பிரதேசத்தில் உள்ளூர் மற்றும் அகதி மக்களுக்கிடையில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றலாம் எனவும் பலர் தெரிவிக்கின்றனர்.

இப் பிரதேசங்களில் அகதியாக வாழ் கின்ற ஒருவர் எவ்விதமான தகமைகள் இருந்தாலும் உரிய பதவிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றது. அவ்வாறு ஒருவர் உயர் பதவிக்கு வந்தாராயின் பலவகையான உளவியல் பாதிப்புக்கு உள்ளாகுவார். இவைகளுக்கு பல்வேறு உதாரணங்கள் காணப்படுகின்றன.

ஒட்டு மொத்தத்தில் எங்களை எங்களுடைய தாயகத்தில் குடியேற்றினால் தங்களுக்கு உள்ள கல்வி பிரச்சினைகள் பாரியளவில் தீர்ந்துவிடும் என அனைவரும் நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர் என ஆசிரியர் எம். கே. எம். லாபிர் தெரிவித்தார்.

## அகதி முகாம்களின் சுகாதாரப் பிரச்சினை

1990ஆம் ஆண்டு வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களின் மூன்றில் இரண்டு வீதமானவர்கள் கல்பிட்டி, புத்தளம் போன்ற பிரதேசங்களிலேயே குடியேறினர். இவர்கள் வாழுகின்ற பிரதேசம் சுகாதாரரீதியாக பல் வேறு பிரச்சினைகளைக் கொண்ட பிரதேசமாகும். ஒரு பரப்புக் காணிகளில் மணற் பிரதேசத்தில் இவர்களின் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன.



"இக்குடியிருப்புக்களில் காணப்படுகின்ற ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு குடி நீர்க் கிணறும் ஒரு மலசல கூடமும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசம் மணற் பிரதேசம் என்றபடியால் நிலநீர் இலகுவாக வடிந்து ஒன்றோடு ஒன்று கலக்கின்றது. அதனால் மலசல கூட நீரும் குடிநீரும் ஒன்றோடு ஒன்று கலந்து பல்வேறு விதமான நோய்களை தோற்றுவிக்கின்றன".

"இப்பிரதேச விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெறுவதற்காக அதிக உரங்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் இப் பிரதேசத்தின் நிலம் மற்றும் நீர் பாதிக்கப்படுகின்றது. இதனால் இப்பிரதேசத்தின் சுகாதாரம் பாரியளவில் பாதிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாட்டினால் இப்பிரதேசத்தில் நிலக்கீழ் நீரில் பல நச்சுத் தன்மைகளும் கலக்கப்படுகின்றன. இக்கிருமிநாசினிகள் இலகுவாக நிலக் கீழ் நீரில் கலக்கின்றது. இதனையே இப் பிரதேச மக்கள் குடிப்பதற்கு பயன்படுத்துகின்றனர். இதனால் இப்பிரதேசத்தில் பாரிய சுகாதாரப் பிரச்சினை காணப்படுகின்றது. மேலும், இப் பிரதேசம் சுன்னாம்புப் பிரதேசமுமாகும். இதுவும் இப்பிரதேசத்தின் குடிநீரில் பாரிய பிரச்சினையாகும்"

(5ஆம் பக்கம் பார்க்க)

உழைப்புத்தான் ஒரு மனிதனை மற்றொரு மனித னை விட முந்தச் செய்கிறது.

~ நைஜீரியா

வலம்புரி

## விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் நடவடிக்கை தேவை

யாழ்ப்பாணத்தில் விவசாயச் செய்கைக் காலம் ஆரம்பித்து விட்டது. மழையின் வருகைக் காக விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

கடந்த காலங்களில் விதை நெல் மற்றும் உள் ளீட்டுப் பொருள்களின் கிடைப்பனவின்மையால் விவசாயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருந் தது.

எனவே கடந்த காலங்களைப் போன்று இவ் வருடமும் விவசாயச் செய்கையில் குறிப்பாக நெற் செய்கையில் விவசாயிகள் அதிகூடிய கவ னம் எடுக்கும் வகையில் விவசாயத் திணைக் களங்கள் மற்றும் கமத்தொழில் அமைப்புக்கள் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ கறுப் பரிசியின் விலை நூற்றிமுப்பது ரூபாயைக் கடந்து விட்டது.

எனவே இந்த அதிகப்படியான விலையேற்றத் தைத் தடுக்க ஒரே வழி நெற் செய்கையை ஊக்கு விப்பதாகும்.

இந் நெற் செய்கையைப் ஊக்குவிப்பதில் பின் வரும் நான்கு வழிகள் பின்பற்றப்பட வேண்டும்.

I. நெற் செய்கைக்குத் தேவையான விதை நெல்லை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுத்தல்.

II. உரம் மற்றும் கிருமிநாசினி போன்ற உள் ளீட்டுப் பொருள்களை மானிய அடிப்படையில் உரிய நேரத்தில் வழங்குதல்.

III. செய்கை செய்யப்படாமல் இருக்கும் வயல்களில் நெல் விதைப்பை ஊக்குவித்தல்.

IV. நெற் செய்கையாளர்களுக்கு வேண்டிய போதெல்லாம் ஆலோசனை வழங்குதல்.

மேற்கூறிய நான்கு வழிகளில் நெற்செய்கை யை ஊக்குவிப்பது கட்டாயமானதாகும்.

இதேபோன்று விவசாயிகள் புகையிலை போன்ற பணப் பயிரை உற்பத்தி செய்வதை விடுத் துத் தானியச் செய்கையில் ஈடுப்டுவது கட்டாய மானதாகும்.

பயறு, எள்ளு, உழுந்து, கௌப்பி, கடலை போன்ற தானியங்களை விளைவிப்பதன் மூலம் உணவுத் தேவை நிறை செய்யப்படுவதோடு நிறைந்த போசாக்கான உணவையும் மக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

எனினும் யாழ்ப்பாண விவசாயிகள் பணப் பயிர்ச் செய்கையில் அதிக நாட்டம் காட்டுவதுடன் மரக்கறிச் செய்கையில் சிலந்திவலைக் கோட் பாட்டின் நியதிகளுக்குட்பட்டு விடுகின்றனர்.

இதன் காரணமாக அவர்கள் மரக்கறிச் செய் கையில் நட்டம டைவதும் அதனைத் தொடர்ந்து விவசாயத்துறையிலிருந்து வேறு துறைகளுக்கு நகர்வதுமான நிலை காணப்படுகின்றது.

எனவே இது விடயத்தில் உரிய அதிகாரிகள் விவசாயிகளை நெறிப்படுத்தி அவர்கள் விவசா யத்தில் பற்றுக் கொள்வதற்கும் போதிய வருமா னத்தைப் பெறுவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## மதுபாவனையை இல்லாது ஒழிக்க பாராளுமன்றம் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சபாநாயகர் டபிள்யூ ஜே.எம். லொக்குபண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மது பாவனையில் ஏற்படக்கூடிய அழிவுகளைத் தடுப்பதற்குப் பாராளுமன்றம் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

மது பாவனைக்கு முற்றுப்புள்ளி என்ற தலைப்பில் நடை பெற்ற பாராளுமன்ற விவாதத்தில் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகள் தத்தமது வாதங்களை முன்வைத்தனர்.

மதுபான நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங் கும் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வில்லை என பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் நிபுணா ராய்ச்சி சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உரிய முறை யில் அனுமதிப் பத்திரங்களை வழங்கவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாட்டில் மது விற்பனை குறித்த அனுமதி வழங்கல்கள் அதிகரித்துள்ளதாக நிபுணாராய்ச்சியால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளித்த பிரதி நிதியமைச்சர் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் சுற்றுலாத் துறையின ருக்கு வழங்கப்பட்ட பத்திரங்கள் என தெரிவித்தார்.

சில பியர் விற்பனை நிலையங்களில் மதுபானம் விற்பனை செய்யப்படுவதாகவும், அரசியல் செல்வாக்குடன் இவ்வாறு சட்டவிரோதமான மதுபான விற்பனை இடம்பெற்று வருவதா கவும் ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது. (அ-6)

## நெருக்கடியைப் போக்குமாறு கிளிநொச்சி மருத்துவர் சங்கம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடி களுக்கு உதவுமாறு கிளிநொச்சியில் உள்ள மருத்துவ சம்மே ளனம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திடம் கோரி யுள்ளது.

விமானத் தாக்குதல்கள் காரணமாக கிளிநொச்சி வைத்தி யசாலையில் கட்டடத் தொகுதியின் கண்ணாடிகள் உடைந் துள்ளதாகவும் அவசர சிகிச்சைப் பிரிவு குண்டு தாக்குதல் அதிர்வினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மருத்து வர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள நிலையில், மக்கள் தற்காலிக கூடாரங்களில் மிகவும் கஸ்டப்படுகின்றனர். குழந்தைகள் இதில் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அரசாங்கத்தின் ஆலோசனையின்படி கிளிநொச்சி வைத்தி யசாலை விஸ்வமடு மகாவித்தியாலயத்திற்கு மாற்றப் பட்டுள்ளது. மருத்துவப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நிலைமையை நேரில் பார்வையிட அரச மருத்துவர்கள் சங்கத்தினர் கிளிநொச்சிக்கு நேரடியாகி விஜயம் செய்யவேண்டும் என கிளிநொச்சி வைத்தியசாலை மருத்துவர் சங்கம் கோரியுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மருத்தவர் சங்கத்தின் கோரி க்கை தொடர்பில் தமது சங்கம் கூடி ஆராயவுள்ளதாக அரசு மருத்துவர் சங்கத்தின் உதவி செயலர் உபுல் குணசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிக்கு வரும் பொதுமக்களை மாத்திரம் தம்மால் கவனிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-6)

## 2009ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது

2009ஆம் ஆண்டிற்கானவரவு செலவுத்திட்ட முன் கூட்டிய முன்மொழிவுகள் நேற்று நாடாளுமன்றில் இன்று சமர்ப்பிக்கப்பட்டன. சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா இதனை சமர்ப்பித்தார்.

இதன்படி 98ஆயிரத்து 63கோடியே 44இலட்சத்து 60ஆயிரம் ரூபா மதிப்பீடு வரவு செலவுத்திட்ட முன்கூட்டிய முன்மொழிவாக சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பாதுகாப்பு அமைச்சுக்கு 177 பில்லியன்ரூபாவும் பொதுநிர் வாக அமைச் சுக்கு 88பில்லியனும் பெருந்தெருக்கள் அமைச்சுக்கு 77பில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சுகாதார அமைச்சுக்கு 58 பில்லியனும் கல்விஅமைச்சுக்கு 28பில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் 2008ஆம் ஆண்டிற்கான கல்வி நடவடிக்கை களுக்காக 442 மில்லியன் ரூபா தேவையேற்பட்டிருப்பதாக கல்விச் சேவைகள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல நாடாளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார கல்விச் சேவையில் பெருமளவிலான ஊழல்கள் இடம்பெறு வதாக குற்றம் சுமத்தினார்.

விவாதத்தில் பங்கேற்ற ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பி னர் அனுரகுமார திஸநாயக்க கடிதங்களைக் கூட வாசிக்கத் தெரியாதவர்கள் கல்வி அமைச்சில் இருப்பதாலேயே இவ்வா றான குளறுபடிகள் ஏற்படுவதாகத் தெரிவித்தார். இந்தக் கூற்றை அடுத்து நாடாளுமன்றில் ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டது.(ஓ)

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ்

ஒலி எல்லோரையும் கவரும் தன்மையுடையது. இயற்கை யாக எழுவது ஓசை அதைவிட உள்ளங்கவர்வது. கருவிகளால் வேறுபட்ட ஓசைகளை எழுப்ப முடியும். இள்மைக் காலத்தில் இசைக் கருவிகளின் ஓசை வசியமாக்கும். இதனைப் பல தமிழிலக்கியப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. இறைவன் ஓசையும் ஒலியும் ஆனவன். இயற்கையிலே இறைவனைக் காணும் மனப்பக்குவம் ஒலியாக நிற்பதை உணர்ந்திருந்தனர். உள்ளத்தால் வழிபடுபவர் ஓசையால் இறைவனைக் கண்டனர்.

இறைவன் உறையும் இடங்களை அறிவிக்கும் மரபு ஒன்று எம்மவரிடையே உள்ளது. இன்றும் கோயில்களில் அம் மரபு பேணப்படுவதைக் காணலாம். அப்பர் தான் வாழ்ந்த காலத் தில் இம் மரபு எவ்வாறிருந்தது என்பதை ஒரு பாடலில் தெளி வாகக் கூறியுள்ளார். நாயன்மார்களில் நாவுக்கரசரின் தொண்டு தனித்துவமானது. "உழவாரப் படையாளி" எனச் சிறப்பு பெயரைப் பெற்றவர். அவர் நாள் தோறும் கோவிலுக் குச் சென்று உழவாரத்தால் கோயிற் சூழலிலுள்ள புல் பூண்டு களைக் களைபவர். கோவிலின் புற வீதிகளைச் சுத்தமாக வைத்திருப்பவர். முதுமைக் காலத்திலும் இப் பணியைத் தொடர்ந்து செய்தவர்.

கோவிற் புறவீதியிலே பணி செய்யும் வேளைகளில் கோவிலில் இசைக்கும் கருவிகளின் ஓசையை நாள்தோறும் கேட்கும் வாய்ப்புப் பெற்றவர். கோவிற் சூழலிலே உள்ள பூம் பொழில்களிலே உரிய பணியைச் செய்யும்போது காதில் வந்து விழும் ஓசையைக் கேட்டுக் கோவிலின் உள்ள இறைவன் திரு உருவத் தோற்றத்தை மனத்திலே கண்டு வழிபடுபவர். வழிபாட்டு நடைமுறைகளை இசைக் கருவிகளின் ஓசையே அவருக்கு துல்லியமாக உணர்த்தியது.

மூன்று ஓசைகள் அவர் காதில் கேட்டன. அவற்றைப் பறையின் ஓசை, பாடலின் ஓசை, மறையின் ஓசை என வகைப்படுத்திக் காட்டுகிறார். பறை ஓசை வழிபாட்டின் தொடக்க வேளையை அறிவிக்கும். பாடல் ஓசை வழிபடும் அடியவர் நிலையை உணர்த்தும். மறையின் ஓசை கிரியைகளை ஆற்றுவோர் பணியை விளக்கி நிற்கும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இவ்வோசைகள் மூன்றும் கோயிலின் செயற்பாடுகளை வெளியே இருப்பவர்க்கு எடுத்துரைப்பவை. அதுமட்டுமன்றிக் கோவிலின் சிறப்பான நிலையையும் அறிவிக்கும். நியமம் தவறாமல் நடைபெறும் கோயில் வழிபாட்டில் பங்குகொள் ளும் வாய்ப்பற்ற அடியவர்கள் இவ்வோசைகளைக் கேட்டு இறை உருவை மனக் கண்ணில் கண்டுவழிபடுவர். அத்தகைய அடியவரில் தானும் ஒருவராக நின்று கோயிற்புறச் சூழலில் நின்று இறைவனை வழிபடும் நாவுக்கரசர் ஓசைகளூடே இறைவனைக் காணும் ஒரு புதிய பக்தி நெறியைப் பயிற்றி யவர். தன் அநுபவத்தைப் பிறரும் பெற்று வழிபாடு செய்யப் பாடியுள்ளார்.

*"பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்*
*மறையின் ஓசையும் மல்கிய அயலெலாம்*
*நிறையும் பூம்பொழில் சூழ்திரு நின்றியூர்*
*உறையும் ஈசனை உள்கும் என் உள்ளமே"*

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- கணிதம்

### பகுதி A பரீட்சை IV நேரம் -40 நிமிடங்கள்

**A** — Answer

1 $\frac{2}{3} - \frac{1}{3}$ ________

2 2.3 x 9 ________

3 (+3) + (-1) ________

4 $75° + 65° + 90° + \square = 360°$ ________°

5 $2 : 3 = 4 : \square$ ________

6 $180° - (96° + 42°)$ ________°

7 நிலைத்த புள்ளியிலிருந்து மாறாத் தூரத்தில் அசையும் புள்ளியின் பாதை ________

8 1 மணித்தியாலத்திற்கு 120km ஆயின், 1 நிமிடத்திற்கு, ________km

9 27 ஐ 3 இன் வலுவில் எழுதினால் ________

**B** — Answer

10 y = -2x + 1 இல் x இன் குணகம் ________

1 $\frac{5}{7} - \square = \frac{2}{7}$ ________

2 சுருக்குக.
7.2 x 0.8 ________

3 சுருக்குக.
( -5 ) – ( -2 ) ________

4 கூர்ங்கோணம் ∠AOB = 47° ஆயின்,
பின்வளைகோணம் ∠AOB ஐக் காண்க. ________°

5 2 : 5 = 6 : x ஆயின், x ஐக் காண்க. ________

6 88° யின் மிகை நிரப்பியை எழுதுக. ________°

7 வட்டம் A இன் விட்டம் 9.4cm உம், வட்டம் B இன் விட்டம் 5.6cm உம் ஆகும். Aயும Bயும் உட்புறமாக ஒன்றையொன்று தொட்டால் மையங்களுக்கு இடைப்பட்ட தூரம் என்ன? ________cm

8 ஒரு கார் 30 நிமிடத்தில் 40km தூரம் செல்லும். அது ¾ மணித்தியாலத்தில் எத்தனை km தூரம் செல்லும்? ________km

9 $(27)^{1/3}$ இன் பெறுமானம் யாது? ________

10 Y = 3x + 2 என்ற நேர்கோட்டின்,
a) படித்திறன்யாது? a)________
b) வெட்டுத்துண்டு யாது? b)________

**C** — Answer


1 $1 = \frac{7}{9} + \frac{4}{9} - \square$ ________

2 $\boxed{243 \times 15 = 3645}$

காண்க. a) 2.43 x 1.5 a)________
b) 24.3 x 0.15 b)________

3 (+7) – (-3) + (-6) ________


4 உருவில் x = 2y ஆயின்,
பின்வருவனவற்றைக் காண்க.




a) x a)________°
b) y b)________°

5 ரூபா 1400 பணத்தை கமல், ரவி ஆகிய இருவருக்கிடையில் 3:4 என்ற விகிதப்படி பங்கிட்டால் கமலுக்கு கிடைக்கும் பணம் எவ்வளவு? ________

6 X,Y,Z ஆகிய முக்கோணிகளுக்கு முறையே 3,1,0 சமச்சீர் அச்சுக்கள் உண்டு. பக்கங்களின் அடிப்படையில்
a) X எவ்வகையான முக்கோணி? a)________
b) Y எவ்வகையான முக்கோணி? b)________
c) Z எவ்வகையான முக்கோணி? c)________

7



வட்டம் A ,ன் விட்டம் 6m. வட்டம் B இன விட்டம் 4m உம் ஆகும். A நிலையாக இருக்க Bயானது A ஐதொட்டவாறு இயங்கினால், B யின் மையத்தின் ஒழுக்கு யாது? ________

8 $36kmh^{-1}$ இல் சீரான கதியுடன் பயணம் செய்யும் வாகனமொன்று 9km தூரத்தைக் கடக்க எவ்வளவு நிமிடம் எடுக்கும்? ________

9 $64^{5/6}$ இன் பெறுமானம் யாது? ________

10 படித்திறன் 2 ஆகவும்,வெட்டுத்துண்டு 3ஆகவும் உள்ள ஒரு நேர்கோட்டின் சமன்பாடு யாது? ________


**D** — Answer

1 ஒரு குவியல் மாம்பழங்களிலிருந்து 3/5 பங்கை நான் பெற்றேன்.எனது தம்பிக்கு 2/5பங்கு கொடுக்கப்பட்டது. பங்குகளுக்கிடையிலான வித்தியாசம் 100 ஆகும். குவியலில் எத்தனை மாம்பழங்கள் இருந்தன? ________

2 வகுப்பறை ஒன்றின் நீளம் 12.5m, அகலம் 4.25m ஆகும். வகுப்பறையின் பரப்பளவைக் காண்க. ________$m^2$

3 $\frac{(-8) \times (-2)}{(-4)}$ ________

4 உருவில் காணப்படும் தரவுகளுக் கிணங்க b ஐக் காண்க.





________

5 குறித்த அளவான அரிசி A,B யிற் கிடையில் 2 : 3 எனும் விகிதத்தில் பகிரப் பட்டபொழுது Aயிற்கு 96kg கிடைத்தது. A 80kg ஐப் பெறுவதற்கு எந்த விகிதத்தில் பகிரப்படுதல் வேண்டும்? ________

6 *ஒரு முக்கோணியின் மூன்று அகக் கோணங் களினதும் கூட்டுத்தொகை 180° ஆகும்.*

| W | X | Y |
|---|---|---|
| | 60° | 40° |
| 40° | | 50° |
| 41° | 71° | |

W,X,Y எனும் முக்கோணிகளின் இரு அகக் கோணங்கள் தரப்பட்டுள்ளன. கோணங் களின் அடிப்படையில் அவை எவ்வகையான முக்கோணிகள்?
W________
X________
Y________


7



1m ஆரையுள்ள வண்டிச் சில்லொன்றின் அச்சிலிருந்து ½ m தூரத்தில் A என்னும் சிறிய கடதாசி ஒட்டியுள்ளது. வண்டி ஓய்விலிருக்க சில்லானது சுழன்றால், A யின் ஒழுக்கு யாது? ________

8 மணித்தியாலம் ஒன்றிற்கு 30 கிலோ மீற்றர் கதியில் பிரயாணம் செய்யும் ஒரு புகைவண்டி சமிக்ஞை தூண் ஒன்றை 12 செக்கனில் கடக்கிறது.
a) புகைவண்டியின் கதி ஒரு செக்கனுக்கு எத்தனை மீற்றர்?
b) புகைவண்டியின் நீளத்தை மீற்றரில் தருக.
a)________$ms^{-1}$
b)________m

9 சுருக்குக.
$\left(\frac{64}{27}\right)^{2/3}$ ________

8 a)B இன் ஆள்கூறு யாது?
b)AB இன் சமன்பாட்டை y = m x + c எனும் வடிவில் தருக.





a)________
b)________

| | A | B | C | D | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| புள்ளிகள் | | | | | |

ஜே.மரியநாயகம்

## முதலாவது டெஸ்ட் போட்டியில்

# ரிக்கி பொன்டிங் சிறப்பான சதம்; ஆஸி. அணி நிதானமான ஆட்டம்



(பெங்களூர்)

அணித்தலைவர் பொன்டிங் சதம் பெற அவுஸ்திரேலிய அணி முதல்நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் நேற்று பெங்களூர் சின்னச்சாமி விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

**ஆரம்பமே அதிர்ச்சி**

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது.

போட்டி ஆரம்பமாகி முதலாவது ஓவரின் 3ஆவது பந்தில் ஆரம்பதுடுப்பாட்டவீரர் மத்யூ ஹைடன் ஓட்டமெதனையும் எடுக்காத நிலையில் சகீர்கானின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

**நிதானமான இணைப்பாட்டம்**

தொடர்ந்து இரண்டாவது விக்கெட்டுக்காக ஹடிச்சுடன் ஜோடி சேர்ந்தார் ரிக்கி பொன்டிங். இந்த ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்து அவுஸ்திரேலிய அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

சிறப்பாக ஆடிய பொன்டிங் 104 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்தார். இந்த ஜோடியைப் பிரிக்க இந்திய அணித் தலைவர் கும்ளே பல்வேறு வியூகங்களை வகுத்தபோதும் முடியவில்லை.

மறுமுனையில் சைமண்ட்ஸ் ஹடிச்சும் அரைச் சதம் கடந்தார். எனினும் இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்காக 166 ஓட்டங்களை எடுத்தபோது நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய ஹடிச் 66 ஓட்டங்களுடன் இசாந்த் சர்மாவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடிபட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மைக்கெல் ஹசி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அணித் தலைவர்ரிக்கிபொன்டிங்தனது36-வதுடெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ததுடன் இந்திய மண்ணில் முதலாவது சதத்தையும் பெற்றார்.

அவுஸ்திரேலிய அணி 226 ஓட்டங்களை எடுத்தபோது சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ரிக்கி பொன்டிங் 243 பந்துகளில் (13 பவுண்டறிகள் உட்பட) 123 ஓட்டங்களை எடுத்த போது ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.



அடுத்த 4-வது விக்கெட்டுக்காக ஹசியுடன் இணைந்த கிளார்க் 11 ஓட்டங்களை எடுத்த நிலையில் சகீர்க்கானின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் நேற்றைய முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களையிழந்து 254 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கெல் ஹசி 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். பந்து வீச்சில் சகீர்க்கான் 2 விக்கெட்டுக்களையும் இசாந்த் சர்மா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (05)

## டெமன்டிவா வெற்றி



கிரம்ளின் கோப்பை டென்னிஸ் தொடரின் 2-வது சுற்றில் ரஷ்யாவின் எலினா டெ மன்டிவா வெற்றி பெற்றார். ரஷ்யத் தலை நகர் மாஸ்கோவில் கிரம்ளின் கோப்பை டென்னிஸ் தொடர் நடக்கின்றது.

நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் 2-வது சுற்றுப் போட்டியில் ரஷ்யாவின் எலினா டெமன்டிவா, சுலோவாக்கியாவின் காத்ரினா ஶ்ரீபொட்னிக்கை எதிர்கொண்டார்.

இதில் சிறப்பாக விளையாடிய டெமின்டிவா முதல் செட்டை 6:3 என வென்றார். 2-வது செட்டில் சுதாரித்துக் கொண்ட ஶ்ரீபொட்டிக் அதை 6:4 எனக் கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இதையடுத்து வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3-வது செட்டில் கடும் போட்டி நிலவியது. இதில் டெமன்டிவா 7:6 என டை-பிரேக்கரில் தன்வசப்படுத்தினார். இறுதியில் டெமன்டிவா 6:3,, 4:6, 7:6 என வென்றார். (05)

# நியூசிலாந்தை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது பங்களாதேஷ் அணி

முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில்பங்களாதேஷ்அணிவெற்றிபெற்றது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.


இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்த நிலையில் 201 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜேக்கப் ஓரம் 57 ஓட்டங்களையும் ரைடர் 34, அணித் தலைவர் டானியல் விக்டோரி 30 ஓட்டங்களையும் எடுத்தார்கள்.

பந்து வீச்சில் மோர்டாஷா 4 விக்கெட்டையும் அப்டுர் ரசாக் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 202 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி யுனைட் சைட்டிக், அஷ்ரபுல் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 45.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 202 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி வெற்றது.

இதில் யுனைட் சைட்டிக் 85 ஓட்டங்களையும் அணித் தலைவர் முகமெட் அஷ்ரபுல் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும் மற்றும் ரகீம் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஆட்ட நாயகனாக பங்களாதேஷ் அணியின் சைட்டிக் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. (05)



சைட்டிக்

# கனடா இருபது-20 தொடருக்கான பாக்.அணியிலிருந்து யூசுப் நீக்கம்



நான்கு நாடுகள் பங்கேற்கும் கனடா இருபது-20 தொடருக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து மொஹமட் யூசுப் நீக்கப்பட்டுள்ளார்.

மொஹமட் யூசுப்புக்கு விசா கோரி கனடா தூதரகத்திற்கு அனுப்பப்பட்ட கடவுச்சீட்டு குறித்த நேரத்தில் மீளக் கிடைக்காமை காரணமாகவே அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நடவடிக்கைப் பிரிவுத் தலைவர் சவ்கத் நக்மி தெரிவித்தார்.

எனினும் 15 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் சர்ச்சைக்குரிய வேகப் பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர் இணைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி நாளை ஆரம்பமாகவுள்ள கனடா இருபது-20 தொடருக்கான பாகிஸ்தான் அணி நேற்றுக் கனடா பயணமானது.

**அணி விபரம்**

சொஹைப் மலிக் (அணித் தலைவர்), சல்மான்பட், காலித் லதீப், சொஹைப் கான், யூனிஸ்கான், மிஸ்பா உல் ஹக், ஷஹிட் அப்ரிடி, பவாத் அலாம், கம்ரன் அக்மல், சொஹைல் தான்வீர், சொஹைப் அக்தர், உமர் குல், அன்வர் அலி, அப்துல் ரவுப், சொஹைல் கான். (05)

# எனது சொந்த மண்ணில் இதுதான் கடைசி டெஸ்ட்

## கும்ளே அறிவிப்பு

கங்குலியைத் தொடர்ந்து அணித் தலைவர் கும்ளேயும் ஓய்வு பெறத் திட்டமிட்டுள்ளார். பெங்களூர் மண்ணில் தனது கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியா-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று பெங்களூரில் ஆரம்பமானது. இலங்கை டெஸ்ட் தொடரில் இந்திய அணி தோல்வியடைய அணித் தலைவர் கும்ளே, கங்குலி, ராவிட் உள்ளிட்ட மூத்த வீரர்கள் ஓய்வு பெற வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. இந் நிலையில் கங்குலி டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்திருந்தார்.

கங்குலியைத் தொடர்ந்து ஓய்வு பெறப் போகும் அடுத்த மூத்த வீரர் யார் என்ற கேள்வி கிரிக்கெட் வட்டாரத்தில் நிலவுகின்றது. இதில் அணித் தலைவர் கும்ளே முன்னிலை வகிக்கின்றார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கும்ளே அளித்த பேட்டியில் சொந்த மண்ணான பெங்களூரில் கடைசி டெஸ்டில் களமிறங்குகின்றேன். இதற்குப் பின் விளையாடும் வாய்ப்பிருக்காது என நினைக்கின்றேன் என்றார். (05)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## திருகோணமலையில் நான்கு தமிழர் கைது

திருகோணமலை நகரப் பகுதியிலும் உவர்மலைப் பகுதியிலும் நேற்றுக் காலை 6.00 மணி தொடக்கம் 9.00மணிவரையும் இலங்கை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடாத்திய தேடுதல் நடவடிக்கையில் நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்கத் தவறியதனாலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். இத்துடன் இவர்கள் திருகோணமலைப் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## வணிக விவசாயப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த வணிக விவசாய அறிவுப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தினத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட நிலையங்களில் வழமையான நேர அட்டவணைப்படி போட்டிகள் நடைபெறுமென யாழ். வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச-3)

## அமைச்சர் மைத்திரி...

பிரிகேடியர் உதய நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

காயமடைந்த பிரதி அமைச்சர் சிறிபால கம்லத் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த ஏனைய ஐந்து பேரும் களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம் பெற்றதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், இச்சம்பவத்தை அடுத்து பொறலஸ்கமுவ-பீலியந்தல வீதி தற்காலிகமாக மூடப்பட்டு தேடுதல்களும் இடம் பெற்றன.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் என்பதுடன் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இந்திய உயர்...

பற்றி சாதகமான போக்கைக் காட்டும் நிலைமை உருவாகியிருப்பதாகவும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி முன்வைத்திருக்கும் யோசனைகளில் நியாயமான போக்குகள் காணப்படுவதாகவும் இவை தொடர்பில் மேற்கொண்டு சாதகமான முறையில் பேசக்கூடியதாக இருப்பதால் இலங்கை சாதகமான சமிக்ஞை காட்டியுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்துவரும் இரண்டொரு தினங்களில் புதுடில்லியுடன் மேலும் சில விடயங்கள் கலந்துரையாடப்பட இருப்பதாகவும் அவற்றை புரிந்துணர்வு அடிப்படையில் மேற்கொண்டதும் இலங்கை புதுடில்லிக்கு ஆரோக்கியமான பதிலை வழங்கும் எனவும் பசில் ராஜபக்ஷ கூறினார்.

தமிழகத்திலுள்ள இரண்டு பிரதான கட்சிகளும் இலங்கை விடயத்தில் பொறுப்புடன் செயற்படவேண்டும் என இலங்கை எதிர்பார்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கொழும்பில்...

நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் வகையில் பொலிஸாரின் நடவடிக்கை அமைந்திருப்பது தொடர்பாக பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் விசனம் தெரிவித்தார்.

தமிழர்களைத் தனிமைப்படுத்தி பதிவுகளை மேற்கொண்டிருக்கும் நிலையில் அனாவசியமாக தினசரி நேரம் காலம் பாராமல் சோதனைகளை மேற்கொண்டு தமிழர்களின் அன்றாட வாழ்க்கையில் பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்திவருவது மிகுந்த வேதனையளிப்பதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ச)

## படையினரி...

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக படைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ படைத்தரப்புக்கு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பாதுகாப்பு...

பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை பாதுகாப்பு அமைச்சுக்கான செலவீனம் மேலும் அதிகரிக்கலாம் என்று நிதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கல்வி அமைச்சுக்காக 441 கோடியே 80 லட்சத்துக்கும் மேற்படாத முழுமையான நிதி ஒதுக்கீட்டுக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

திட்டமிட்ட பரீட்சைகளுக்கு மேலதிகமாக பரீட்சைகளை நடத்த வேண்டி இருப்பதால் இந்த நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டி இருப்பதாக இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கல்விச்சேவைகள் அமைச்சர் நிர்மல கொத்தலாவல கூறினார்.

எவ்வாறாயினும் ஆசிரிய சம்பள முரண்பாடுகளை இதுவரை தீர்த்து வைப்பதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார சபையில் குறிப்பிட்டார். (ச-3,5)

## ஈழத்தமிழர் போராட்டத்துக்கு...

இது தொடர்பில் நேற்று வியாழக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கருணாநிதியின் கேள்வி-பதில் விளக்கமும் செயல்பாடும் வேடிக்கையாக உள்ளன.

தன்னுடைய மைனாரிட்டி அரசின் செயல்படாத தன்மையையும் கடமை தவறிய முறைகளையும் குறைகளையும் யாராவது சுட்டிக்காட்டினால் அதற்காக மற்றவர்கள் மீது சேற்றை அள்ளி வீசி பிரச்சினையில் இருந்து நழுவி தப்பித்துக் கொள்ளும் தந்திரத்தில் இறங்கி விடுகிறார் கருணாநிதி.

தனது குடும்பத்தாருக்கும் தனது கட்சி விசுவாசிகளுக்கும் செல்வம் கொழிக்கும் பதவிகளைப் பெற மத்திய அரசில் தனக்கு இருக்கும் செல்வாக்கை தயக்கமின்றி பயன்படுத்துகிறார், இந்திய அரசை மிரட்டுகிறார். ஆனால், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் சென்னையில் உட்கார்ந்து கொண்டு அறிக்கை வெளியிடுவதோடு நின்றுவிடுகிறார் என்பதை நான் சுட்டிக்காட்டியிருந்தேன்.

என்னுடைய அறிக்கையினால், எனது குற்றச்சாட்டினால் தமிழினத் தலைவர் என்று தனக்குத் தானே வழங்கிக்கொண்ட பட்டத்திற்கு ஆபத்து ஏற்படுவதைக் கண்டு நிலைமையை சமாளிக்க கருணாநிதி என் மீது குற்றம் சுமத்துகிறார்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் என்னுடைய நிலைப்பாடும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடும் எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே.

இலங்கையின் மற்ற குடிமக்களைப் போல தமிழர்களும் சம உரிமையுள்ள குடிமக்கள். அவர்கள் யாருக்கும் இரண்டாந்தரமானவர்கள் அல்லர். சட்டத்தின் முன் சமத்துவம் வேண்டியும், கல்வியில், வேலைவாய்ப்பில் சமத்துவம் பெறவும், இலங்கைத் தமிழர்கள் நடத்தும் நெடிய போராட்டத்தை நாங்கள் முழுமையாக ஆதரிக்கின்றோம்.

சுய நிர்ணய உரிமைவேண்டி அவர்கள் நடத்தும் தார்மீக போராட்டத்தை நாங்கள் முழுமையக அங்கீகரிக்கிறோம். இலங்கையில் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு தமிழர்கள் தங்களுக்கென சுயாட்சி உரிமையுள்ள தமிழ்த் தாயகம் உருவாகிக் கொள்ள அவர்களுக்கு இருக்கும் வேட்கையை நாங்கள் புரிந்து, ஏற்றுக் கொள்கிறோம்.

பகை மூண்டு, திசைமாறிப்போன ஆயுதப் போராட்டத்தினால், பல்லாயிரம் தமிழர்கள் அத்தகைய பகையில் கொன்று குவிக்கப்படுவதைக் கண்டு வேதனைப் படுகிறோம்.

அதற்கு காரணமான ஆயுதப் போராட்டத்தை எதிர்க்கின்றோம். அத்தகைய சகோதரப் பகையினால் மூண்ட ஆயுதப் போரின் விளைவாகஇந்தியத் திருநாட்டின் முன்னாள் பிரதமர் படுகொலை செய்யப்பட்டதை நாங்கள் கண்டிக்கிறோம், ஏற்க மறுக்கிறோம், எதிர்க்கிறோம்.

தமிழர் விடுதலைக்காகப் போராடிய எண்ணற்ற தலைவர்கள் இலங்கை மண்ணிலேயே கொன்று குவிக்கப்பட்டதை, பல தமிழ்த் தலைவர்கள் வெடிகுண்டுவீசி பொசுக்கப்பட்டதை ஏற்க மறுக்கிறோம், எதிர்க்கிறோம்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இரு வேறு பக்கங்கள் உள்ளன என்பதை தெளிவுற உணரவேண்டும். சுய நிர்ணய உரிமைக்கென்ற தமிழர்களின் போராட்டம் என்பது ஒருபுறம், ஆயுதமேந்தியவர்கள் பயங்கரவாதத்தில் ஈடுபடுவதென்பது மறுபுறம்.

முதலாவதை ஆதரிக்கிறோம். இரண்டாவதை கடுமையாக எதிர்க்கிறோம். தமிழர்களின் சுய உரிமைப் போராட்டத்துக்கு எங்கள் ஆதரவு, ஒத்துழைப்பு, நல்லெண்ணம் என்றைக்கும் மாறாதது.

பயங்கரவாத செயல்களை,ஆயுத மோதல்களை, அதிலும் அத்தகைய மோதல்களால் இந்தியாவின் சட்டம் ஒழுங்கும், பொது ஒழுங்கும், அமைதியும், இறையாண்மையும் சீர்குலைவதை ஒருநாளும் ஏற்கமுடியாது.

தமிழ்ப் பயங்கரவாதத்தை எதிர்க்கிறோம் அதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை. தற்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் இடம்பெயர்ந்து வசிக்க இடமில்லாமல் அவர்களுடைய சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

உண்ண உணவு, தங்க இருப்பிடம், மருந்து ஆகியவை இல்லாமல் வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை இராணுவத்தின் உக்கிர தாக்குதலுக்கு பெண்கள் மற்றும் குழந்தைகளும் கூட ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பல மாதங்களாக இந்த நிலைமைதான் இலங்கையில் நிலவுகிறது.

தந்திகள் அனுப்புவதனாலோ அல்லது இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் கீழ்நிலை அலுவலரை அழைத்து கண்டனம் தெரிவிப்பதனாலோ பாதிக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

மத்தியிலும் மாநிலத்தில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் குறித்து எள்ளளாவது கவலை இருக்க வேண்டாமா?

உணவு உடை, இருப்பிடம், மருத்துவப் பொருட்கள் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை திரட்டித் தர மத்திய அரசு முன்வரவேண்டும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் தமிழ் நாட்டு மக்களின் பிரதிநிதி என்ற முறையிலும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses...
Dip In Computerized Accounting
Diploma in English(Grammer & Spoken)
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
## பதிவு செய்வோருக்கு 50% கற்கை கட்டண சலுகை
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com


## எமது புதிய வெளியீடு

- சக்கரகட்டி DVD
- துரை DVD 5 IN 1
- புதிய Remix DVD
- புதிய MP 3 DVD
- புதிய ஆங்கில DVD
- புதிய தமிழாக்கம் DVD

FLASH CD HOUSE
No.1ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (1930)

## ஆசிரியத்துவம் மனித மாண்பிற்கு மகத்துவம்
## ஆசிரியதின குறும்படம் வெளியீட்டு விழா

## "ஒப்பிலாமணியே"



இடம்:- கைலாசபதி கலையரங்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
காலம்:- 11.10.2008
சனிக்கிழமை காலை 9.30 மணி
பிரதம விருந்தினர்
பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள்
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தயாரிப்பு
திருமதி அ.வேதநாயகம்
யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர்
இயக்கம்
திரு.க.இ.கமலநாதன்
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(C-1644)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.